# கரூர் மாநகராட்சி

*(கரூர் மாநகராட்சி சட்டம் 2021 திடக்கழிவு மேலாண்மை 2016, துணை விதிகளின் கீழ் வெளியிடப்படும் அறிவிப்புகள்)*

மத்திய அரசின் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986 (இந்திய அரசு சட்டம் 29/1986) பிரிவு எண்கள்.3,6 மற்றும் 25ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி மாநகராட்சி திடக்கழிவுகளைக் கையாளுதலையும், மேலாண்மையையும் ஒழுங்குபடுத்துவதன் பொருட்டு, திடக்கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016 எனும் விதிகளை இயற்றியுள்ளது. இந்த திடக்கழிவுகள் மேலாண்மை விதிகள், 2016 கரூர் மாநகராட்சி அமைப்புகள் அதனது பகுதிகளில் இந்த விதிகளின் பிரிவுகளைச் செயல்படுத்த இருக்கும் மற்றும்திடக்கழிவுகளைத் தொகுக்க, சேமிக்க, பிரிக்க, போக்குவரத்து செய்ய, நொதித்தல் செய்ய அப்புறப்படுத்த உள்கட்டமைப்பு வசதிஏற்படுத்தும் அனைத்து நகராட்சி ஆணைக் குழுக்களுக்கும் பொருத்தும், மாநகரத் திடக் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்)விதிகள் 2016ல் அறிவிக்கப்பட்டுள்ள குப்பைச்சேகரித்தல் மற்றும் பிரித்தல் அமைப்புக்குஏற்ப குப்பை சேர்வதைத் தவிர்க்கவும்.திடக்கழிவுகளைப் பிரிக்கப்பட்ட நிலையில் உருவாக்கவும் தொடர்புடைய மாநகர ஆணைக்குழுக்கு ஒத்துழைப்பை நல்கி செயல்படவேண்டியது திடக்கழிவுகளை உருவாக்குபவர்களின் முக்கிய பொறுப்பாகும்.

கரூர்மாநகராட்சிச் சட்டம், 2021 (தமிழ்நாடு சட்டம்5/2021) ஏற்ப பிரிவுகள் 119, 120, 226, 227 228, 229, 230, 231, 232,233, 234 235, 265, 430, 431, 432, 433, 434, 435, 436, 438, 439, 440 மற்றும் அதன் பின் வந்துள்ள அடுத்தடுத்ததிருத்தங்களை உள்ளடக்கிய துணை பிரிவுகளின்படி கரூர்மாநகரின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தினை பேனும் வகையில்திடக்கழிவு மேலாண்மையை உறுதிப்படுத்துவதற்காககரூர்மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணைவிதிகள், 2022பிறப்பிக்கப்படுகிறது.

கரூர் மாநகராட்சித் திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள், 2022கரூர் மாநகராட்சி சட்டம், 2021 (தமிழ்நாடு சட்டம் 5/2021) 432 பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

1.0 தலைப்பு: இது " கரூர் மாநகராட்சி திடக்கழிவுகள் மேலாண்மை துணை விதிகள் 2022" என்று அழைக்கப்படும்.

2.0 செயல்பாடு எல்லை: இந்தத் துணைவிதிகள் கரூர் நகரின் எல்லைக்கு உட்பட்ட அனைத்துப் பொதுஇடங்களுக்கும் மற்றும் மாநகரத் திடக்கழிவுகள் ஏற்படுத்தும்

அனைவருக்கும் மற்றும் கரூர் மாநகராட்சி எல்லைக்குள் தனியார் உரிமையில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் அனைத்து வளாகங்களுக்கும் பொருந்தும்.

3.0 வரையறைகள்: இந்தத் துணைவிதிகளில் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள வரையறை செய்யப்படாத சொற்கள் மற்றும் அவை உணர்த்தும் பொருள் வெளிப்பாடுகள், சூழல் மாற்றாகக் கொள்ள தேவை இல்லை என்றால், முறையே கரூர் மாநகராட்சி சட்டம் 2021(தமிழ்நாடு சட்டம் 5/2021) த்தில் கொடுக்கப்பட்டுள்ளவாறு இருக்கும்.

**கீழ்க்கண்ட சொற்களின் பொருள்கள் இங்குப் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளன.**

1. **முகமை:** என்பது தெருவைப் பெருக்குதல், கழிவுகளை எடுத்தல், பயனர் கட்டணம் பெறுதல் போன்றவற்றிற்காகமுகமைக்கும்கரூர் மாநகராட்சிக்கும் ஒப்பந்தம் அடிப்படையில் கடமைகளை ஆற்றும் கரூர் மாநகராட்சியால் பணிஅமர்த்தப்பட்ட அல்லது தனக்காகச் செயல்பட அதிகாரம் வழங்கப்பட்ட தனியார் நிறுவனம்.

2. **உயிர்வளி நிலையில் உரமாக்குதல்:**என்றால் உயிர்வளி உள்ள நிலையில் உயிரகப்பொருட்களை நுண்ணுயிர் மூலம்சிதைக்கச்செய்யும் ஒரு கட்டுப்படுத்தப்பட்ட செயல்முறை என்று பொருள்படும்.

3. **உயிர்வளியில்லாத நிலையில் பக்குவப்படுத்துதல் (புழுக்குதல்):** என்றால் உயிர்வளியில்காத நிலையில்உயிரகப்பொருட்களை நுண்ணுயிர் மூலம் சிதைக்கச்செய்யும் ஒரு கட்டுப்படுத்தப்பட்ட செயல்முறை என்று பொருள்படும்.

4. **உதவி ஆணையாளர்:** என்பவர் கரூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட மண்டலம் (வார்டு) அலுவலகத்தின் உதவிஆணையாளரைக் குறிக்கும்.

5. **அங்கீகாரம்:** என்றால்தேற்விற்கேற்ப திடக்கழிவுகளை செய்முறைப்படுத்துதல் மற்றும் அப்புறப்படுத்துதல் ஆகியபணிக்குப் பொறுப்புடைய இயக்குபவர் அல்லது நகர்புரகரூர் மாநகராட்சி அதிகார அமைப்பு அல்லது ஏனைய யாதொருமுகமைக்கு மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அல்லது மாசுக்கட்டுப்பாட்டுக் குழுவினால் வழங்கப்படும் அனுமதி ஆகும்.

6. **மக்கும் உயிரி கழிவுகள்:**என்பது நகராட்சி திடக்கழிவுகளில் பொதுவாகக் காணப்படும் குப்பை. இது ஈரமான கழிவுஎனவும் அழைக்கப்படுகிறது. மக்கும் கழிவு பொதுவாகத் தாவரம் அல்லது விலங்கு ஆதாரங்களில் இருந்து உருவாகும் கழிவு ஆகும்.இக்கழிவுகள் பிற வாழும் உயிரினங்களால் மக்கும் தன்மையனவாய் இருக்கும். இது காய்கறிக் கழிவுகள், உணவுக் கழிவுகள்,தோட்டக் கழிவுகள், தேங்காய் ஓடுகள், மரத் துண்டுகள், நகம், முடி, முட்டை ஓடுகள், எலும்பும் மற்றும் சதையில் பயன்படுத்தப்பட்ட பருத்தி,காகிதம், போன்றவற்றை உள்ளடக்கியது. பிற உயிர் மக்கும் குப்பைகள் மனிதக் கழிவு, விலங்குக் கழிவு, கழிவுநீர், இறைச்சிக் கொட்டில் கழிவுகள் முதலியன.

7.**மருத்துவக்கழிவுகள்:** என்பது மனிதர் அல்லது விலங்குகள் நோய் ஆய்வு, மருத்துவம் அல்லது நோய்த்தடுப்பு,இவை தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகள் ஆகியவற்றில் உருவாகும் கழிவுகள் அது உருவாக்கப்படும்போது அல்லது உயிரியல்ஆய்வின்போது அல்லது அட்டவணை–4ல் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் உள்ளடக்கிய கழிவுப் பொருள்கள்.

8.**உயிரி மீத்தேனாக்கம்**:என்பது உயிர்பொருள்களை நொதித்தல் சிதைவு வழி நுண்ணுயிர் நடவடிக்கைக்கு வகை செய்துமீத்தேன் அதிகமாக இருக்கும் உயிர்வாயு உருவாக்கும் செயல்முறை ஆகும்.

9. **வணிகக்குறி உரிமையாளர்**:என்பவர் ஒரு தனி நபரோ ஒரு நிறுவனமோ எந்த பொருளையும் பதிவு செய்யப்பட்ட வணிகக்குறி அடையாளத்துடன் விற்பனை செய்பவர் என்று பொருள்படும்

10. **பெருமளவு கழிவுகள் உருவாக்குபவர்கள்**: என்பவர் வீட்டுச்சமூகம்/ வீட்டு வளாகங்கள் உணவகங்கள், விடுதிகள், சந்தைகள்,தொழிற்பேட்டைகள், கடை வளாகங்கள்/விற்பனையகங்கள், அரசு அல்லது பொது கட்டிடங்கள் அல்லது மன்றம்,உடற்பயிற்சிப் போட்டிக்களம், திருமண மண்டபங்கள், மனமகிழ் மன்றம்/ கேளிக்கை மன்றம் போன்றனவற்றுடன் பிற பயன்பாட்டிற்குஎன்று தொடர்புடைய உதவி ஆணையாளரால் அடையாளம் கண்டு குறிப்பிடப்பட்டுள்ள ஆதாரம்/ வளாகங்கள் ஆகியவற்றின்உரிமையாளர்/தங்கி இருப்போர் அல்லது உரிமையாளர் அல்லது தங்கியிருப்போரின் பிரதிநிதி ஆகியோர்களில் 100 கிலோ அளவிற்குமேல் உருவாக்குபவர்கள்

11 .**துணை விதிகள்**:என்பது கரூர் மாநகராட்சி அமைப்புகள், மக்கள் தொகை கணக்கெடுப்பு நகரம் மற்றும்அறிவிக்கப்பட்ட நகரிய பகுதிகளில் தங்கள் அதிகார வரம்பு எல்லைக்குள் முனைப்பாக இத்தகைய விதிகளைச் செயல்படுத்துவதற்குமுறைபடுத்தப்பட்ட கட்டமைப்பு என்று பொருள்படும்.

12. **சிசிஎம்சி (CCMC)**:என்பதுகரூர்மாநகராட்சி சட்டம், 2021 (தமிழ்நாடு சட்டம் 5/2021 ன் கீழ் நிறுவப்பட்ட ஒரு மாநகராட்சி சட்டம் ஆகும்.

13. **தூய்மைப் பகுதி**:என்பது எந்த வளாகத்தின் முன்னும் அல்லது சுற்றியுள்ள பகுதிகள் அல்லது வடிகால் /நடைபாதை ஓரத்தில் வரிசையாகப் பதிக்கப்பட்ட கல் (KERB) ஆகியன உள்ளிட்ட அப்பகுதிவரை ஒட்டியுள்ளதும் ஆன பகுதிகள்தூய்மைப் பகுதி என்று பொருள்படும்.

14. **பெறுதல் (Collection)**:என்றால் நகராட்சி திடக்கழிவுகளை நிலையான இடங்களிலிருந்து அல்லது மற்ற இடங்களிலிருந்து,"எடுத்தலும் அகற்றுதலும் என்று பொருள்படும்.

15. **உருவாகும் இடத்தில் பெறுதல் (Collection at Source)**:என்றால்வளாகங்களுக்குள் இருக்கும் எந்தக்கட்டடத்திலிருந்தும் அல்லது குழுவாக இருக்கும் கட்டடங்களின் பொது இடத்திலிருந்தும் நேரிடையாக மாநகராட்சிதிடக்கழிவுகுப்பைகளை பெறுவதாகும். இது வீடுகள் தோறும் அல்லது வாசல்கள் தோறும் சென்று பெறுதல் என்றும் குறிப்பிடப்படும்.

16. **எளிதில் தீப்பிடிக்கும் கழிவு**:என்பது நெகிழி மற்றும் மரக்கூழ் போன்ற குளோரின் செறியூட்டப்பட்ட பொருட்கள்தவிர்த்து, குறைந்தபட்ச கலோரி மதிப்புடைய 1500 கிலோ கலோரிக்கு அதிகமான உயிரிசாராத மக்காத மறுசுழற்சி செய்ய முடியாத மீண்டும் பயன்படுத்த முடியாத, அபாயகரமில்லாத திடக்கழிவு என்று பொரும்படும்.

17. **ஆணையாளர்** :என்பவர் கரூர் மாநகராட்சியின் ஆணையாளர் அல்லது எந்த அதிகாரிக்கு அதிகாரங்கள்வழங்கப்பட்டுள்ளனவோ அல்லது கரூர்மாநகராட்சி சட்டம், 2021 (தமிழ்நாடு சட்டம் 5/2021)ன் கீழ் அல்லது வேறு எந்தசட்டத்தின் கீழ் தொடர்புடைய

பணிப்பேராணை வழங்கப்பட்டுள்ளவர் என்று அங்குச் சூழல் பொருள் மாற்றம் கொள்ள வேண்டும்.

18. **சமுதாய குப்பைத் தொட்டி (Community Waste Storage Bin)**:என்றால் கரூர்மாநகராட்சியால் நிறுவப்பட்டும்பராமரிக்கப்பட்டும் வரும் குப்பைத் தொட்டி அல்லது உரிமையாளர்கள் மற்றும் / அல்லது குடியிருப்போர் கூட்டாக ஒன்று அல்லது பலவளாகங்கள் சேர்ந்து குப்பைகளை தரம் பிரிக்கவும் வசதி கொண்ட வகையில் எதாவது ஒரு வளாகத்தின் சாலையோரத்தில் அல்லதுஅவர்களுக்குரிய பொது இடத்தில் அமைக்கப்பட்ட குப்பைத் தொட்டி ஆகும்.

19. **உரமாக்கல் (Composting)**: என்றால் உயிர்மப் பொருளை நுண்ணுயிர் சிதைவுக்கு உட்படுத்திச் செய்யும் ஒருகட்டுப்படுத்தப்பட்ட செயலாக்கம், இது புழு களைப் பயன்படுத்தி மக்கச் செய்வதையும் உள்ளடக்கியது. அதாவது மண் புழுக்களைப்பயன்படுத்தி உயிர் மக்கும் கழிவுகளை மக்கிய உரமாக மாற்றும் ஒரு செயலாக்கமாகும்.

20. **ஒப்பந்ததாரர்**:என்பது சேவையை அளிக்கிற அதிகாரமன்றத்திற்காக பணி அல்லது சேவையை மேற்கொள்பதற்காகபொருட்கள் அல்லதுதொழிலாளர்களை வழங்குவதற்காக ஒரு நபரோ, ஒரு நிறுவனமோ செய்து கொள்கிற ஒப்பந்தம் என்றுபொருள்படும்.

21. **இணைச்செயலாக்கம்**:என்பது தொழிலகம் செய்முறையில், 1500 கி.கலோரி மதிப்புக்கும் மேற்பட்ட மதிப்பு கொண்ட உயிரிசாராத மக்காத மற்றும் மறுசுழற்சியற்ற திடக்கழிவை, மூலப்பொருளாக அல்லது எரிசக்தி ஆதாரமாக அல்லது இயற்கை கணிமவளங்களுக்கும் படிம எரிபொருட்களுக்கும் மாற்றாக அல்லது அதற்குத் துணை புரிவதற்காகப் பயன்படுத்துதல் என்று பொருள்படும்.

22. **கட்டுமானம் மற்றும் கட்டிட உடைபாடு பொருட்கள் (C&D Waste)**:என்பது பழுது பார்த்தல், கட்டுமானம்,மீளக்கட்டுதல் செயல்பாடுகளால் உருவாகும் கழிவுகளோடு கட்டுமானத்திலும் கட்டிட இடிபாடுகளில் ஏற்படும் இடர் தரத்தக்கதல்லாதஇயல்புள்ள கழிவுகளாகும்.

23 **கொள்கலத்துடன் கூடிய வண்டி (Containerised Cart)**:என்பது மாநகராட்சி திடக்கழிவை ஓரிடத்திலிருந்துஇன்னோரிடத்திற்குக் கொண்டு செல்லகரூர்மாநகராட்சியால் அல்லது மாநகராட்சி அமர்த்திய முகமை / முகவரால்கொடுக்கப்பட்ட கைவண்டியாகும்.

24. **பரவலாக்கப்பட்ட செய்முறை**:என்பது செய்முறைபடுத்துவதற்காக திடக்கழிவை,ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு செல்வதைக் குறைப்பதற்காக உயிரி மக்கும் கழிவை செய்முறைப்படுத்துவதை அதிகரிப்பதற்காகவும், கழிவு உருவாக்கப்பட்ட ஆதாரத்திற்கு நிகரான அளவில் மறுசுழற்சி பொருட்களைப் பெறுவதற்காகவும் பரவலாக்கப்பட்ட(Decentarlized) வசதிகளை நிறுவுதல் என்று பொருள்படும்.

25 **ஒப்படைப்பு (Delivery)**:என்பது கரூர் மாநகராட்சியின்எவ்கையான திடக்கழிவுகளை மாநகாரட்சியால்நியமிக்கப்பட்ட / அங்கீகரிக்கப்பட்ட கரூர் மாநகராட்சி துப்புரவு பணியாள் எடுத்துச் செல்லமற்றும்கரூர்மாநகராட்சியால் வழங்கிய ஏதாவது வாகனங்களில் ஏற்ற அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட முகமைகள்அல்லது அவ்வாறு செய்ய கரூர் மாநகராட்சியின் உரிமம் வழங்கப்பட்டவருக்கு ஒப்படைத்தலாகும்.

26 **ஒருவகை செய்தல் (Disposal):**என்பது அட்டவணை–1'ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதப்படுத்தியப் பிறகு எஞ்சும்திடக்கழிவு மற்றும் தெருக்குப்பைகள் மற்றும் நிலத்தின் மேற்பரப்பு வடிகால்களிலிருந்து கிடைக்கும் வண்டல்கள், நிலத்தடி நீர், மேற்பரப்புநீர் மற்றும் சுற்றுப்புற காற்று தூய்மைக்கேடுறுவதையும், விலங்குகள் அல்லது பறவைகளை ஈர்ப்பதைத் தடுப்பதற்காக இறுதியான
பாதுகாப்பான முறையில் அகற்றுதல் என்று பொருள்படும்.

27. **வீடுகள் சார்ந்த அபாயகரமான கழிவு:**என்பது வீட்டு அளவில் உருவாக்கப்படும் தூக்கி எறியப்பட்ட வர்ண டப்பாக்கள்,பூச்சிக் கொல்லி கொள்கலன்கள், CFLபல்புகள், குழல் விளக்குகள், காலாவதியான மருந்துகள், உடைந்தபாதரசமானிகள்,உபயோகப்படுத்தப்பட்ட பேட்டரிகள், பயன்படுத்தப்பட்ட ஊசிகள் மற்றும் பீங்கான் குழல்கள் மற்றும் அசுத்தமான அளவிகள் என்றுபொருள்படும்.

28: **வீடு வீடாகச் சேகரித்தல்:**என்பது குடும்பங்கள், கடைகள், வணிக நிறுவனங்கள், அலுவலகங்கள், நிறுவனங்கள்ஏனையதொரு குடியிருப்பில்லாத வளாகங்களின் வாயிலுக்கருகே வந்து திடக்கழிவுகளை சேகரிப்பது என்று பொருள்படும். அத்தகையகழிவுகளை சமூதாய வீடுகள், பல மாடிகளைக் கொண்ட கட்டிடம் மற்றும் தொகுப்புவீடுகள், பெரிய குடியிருப்பு, வணிக அல்லதுநிறுவன வளாகங்கள் அல்லது நில மனையிடம் ஆகியவற்றின் கழிவுகளை ஒவ்வொரு நுழைவு வாயில் அல்லது தரைத்தளத்தில்அதற்கென நியமிக்கப்பட்ட இடங்களில் சென்று சேகரிப்பதும் இதில் அடங்கும்.

29.**உலர்கழிவுகள்** என்பது மக்கும் உயிரி கழிவுகள் மற்றும் தெருக்குப்பைகளை சேகரிப்புகள் மற்றும் பிற கழிவுப் பொருள் மட்டுமல்லாது மறுசுழற்சி செய்யும் கழிவுகள் மற்றும் மறுகழற்சியற்ற கழிவுகள், தீப்பிடிக்கும் கழிவுகள் மற்றும் பெண்கள் பயன்படுத்தும்சுகாதாரநாப்கின் மற்றும் குழந்தைகளுக்கான டயப்பர் ஆகியன அடங்கும்.

30. **குப்பைகளைக் குவிக்கும் தளங்கள்** என்பது கரூர் மாநகராட்சி அமைப்புகளால் சுகாதார முறையில்குப்பைகளை நிலத்தில் நிரப்புதல் என்ற விதிகளை பின்பற்றாமல் திடக்கழிவுகளை சேமித்து வைக்க பயன்படுத்தப்படும் ஒரு நிலம்என்று பொருள்படும்.

31. **மின்கழிவு (e–Waste)** என்பது தனிநபர் கணினிகள், தொலைபேசிகள், எம்பி3 ஒலி மற்றும் ஒளி (இசை) இயக்கும்கருவி, தொலைக்காட்சிப் பெட்டிகள், கால்குலேட்டர்கள். ஜிபிஎஸ் (GPS) தானியங்கி மின்னணுக் கருவிகள், டிஜிட்டல் புகைப்படப்பெட்டிகள் ஆகியவற்றுடன் காளொலி ஊடகமாகப் பயன்படும் டிவிடி, விசிஆர் அல்லதுகேம்கோடர்கள் போன்ற ஒலி மற்றும் ஒளி(இசை) இயக்கும் பதிவு செய்யும் கருவிகளின் கழிவுகள் என்று பொருள்படும்.

32. **விரிவுப்படுத்தப்பட்ட தயாரிப்பாளர் (EPR)** பொறுப்பு என்பது சிப்பம் செய்யப்பட்ட பொருட்களின் காலாவதிநாட்கள்வரையில் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையில் மேலாண்மை செய்வதற்காக நெகிழி, தகரம், கண்ணாடி மற்றும் நெகிழிப்பெட்டிகள் முதலிய சிப்பம் செய்கிற பொருட்களைத் தயாரிக்கும் தயாரிப்பாளர்களுக்கு உள்ள பொறுப்பு என்று பொருள்படும்.

33.**வசதி** என்பது எந்த நிறுவனமாக இருந்ததாலும் அங்கு திடக்கழிவு மேலாண்மை செயல்முறைகளை அதாவது பகுப்பு,மீட்பு சேமிப்பு, தொகுப்பு,மறுசுழற்சி செயலாக்கம், சுத் கரிப்பு அல்லது பாதுகாப்பாக அகற்றுதல் ஆகியவை மேற்கொள்ளப்படுகிறயாதொரு நிறுவனம் என்ற பொருள்படும்.

34. **பழக்கப்படுதல்/ எச்சரிக்கைக் காலம்** (Familiriazation/ Warning Period) என்பது விதிகளை மீறுவதற்குச் செலுத்தவேண்டிய தண்டத் தொகையில் தளர்வுள்ள அட்டவணை–1ல் வழங்கப்பட்டுள்ள குறிப்பிட்ட காலம்.

35 **அபராதம்** என்பது இந்த விதிகள் மற்றும் /அல்லது துணைவிதிகளில் அடங்கியுள்ள கட்டளைகளுக்கு இணக்கமாகச்செயல்படாததற்காக, துணை விதிகளின் கீழ் கழிவு உருவாக்குபவர்கள் அல்லது கழிவை செயல்முறைப்படுத்தலை மற்றும் அகற்றுதல்வசதிகளை இயக்குவோர் மீது விதிக்கப்படும் தண்டனைத்தொகை என்று பொருள்படும்.

36. **கழிவுகளை உருவாக்குபவர்** என்பது யார் கரூர் மாநகராட்சி எல்லைக்குள் குப்பைகளை உருவாக்குகிறாரோஅவரைக் குறிப்பிடுகிறது.

37. **தோட்டம் மற்றும் தோட்டக்கலை பெருமளவுக் கழிவு** என்பது பூங்காக்கள், தோட்டங்கள், போக்குவரத்து வட்டங்கள்போன்றவற்றிலிருந்து உருவாகும் பெருமளவுக் கழிவுகள் ஆகும். அன்றாட கழிவுகள் எடுத்தலில் சேர்க்க இயலாத மக்கும் கழிவுகளானபுற்களை வெட்டுதல், வருடாந்திர களைகள், கிளைகளைக் கழித்தல், சருகுகள், மரச்சிராய், வைக்கோல், உயர்ந்த இலைகள்,
ஒழுங்குபடுத்துவதால் ஏற்படும் மரக்கழிவு போன்றவற்றால் உருவாகும் கரிமம் (Carbon) அதிகமாக உள்ள பழுப்பு மரப்பொருள்கள்இதில் அடங்கும்.

38. **கையாளுதல்** என்பது திடக்கழிவுகளின் பகுப்பு, பிரித்தெடுத்தல், பொருள் மீட்புசேகரித்தல், இரண்டாம் நிலை சேமிப்பு, சிதறடிப்பு மூட்டையாக கட்டுதல், நசுக்குதல்,ஏற்றுதல், இறக்குதல், கொண்டு செல்லுதல்செய்முறைப்படுத்துதல் மற்றும் திடக்கழிவுகளைஅகற்றுதல் ஆகியவை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் அடங்கும்.

39.**அபாயகரமான கழிவு** என்பது கழிவுகள், இயற்பியல், வேதியல், எதிர்ச்செயல்பாடு, நச்சு, காரணத்தால் ஆபத்துத்தருவது அல்லது உடல்நலத்திற்கு அல்லது சுற்றுச்சூழலுக்கு ஆபத்தும் தரத்தக்கதாக இருக்கக்கூடியது. துணியாக அல்லது வேறொருகழிவுகளோடு, அல்லது பொருள்களோடு சேரும்போது ஆபத்து ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளது. குறிப்பாக அட்டவணை–3ல்குறிப்பிட்டுள்ளபடி, இந்தத் துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளதும் பிற அபாயகரமான கழிவும் அபாயகரமான கழிவுகள் என வரையறுக்கப்பட்டுள்ளன. அபாயகரமான கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) சட்டங்கள், 1989(இன்று வரை திருத்தம்செய்யப்பட்டுள்ளது).

40.**அபாயகரமான வீட்டுக் கழிவுகள்** (HHW) என்பது பொதுவான வீட்டு வேதியல் பொருள்கள் மற்றும் உரிமையாளருக்குஇனி பயன்படாத கழிவு பொருள்கள் ஆகியவை உள்ளிட்ட அபாயகாமான கழிவுகள், எதிர்வினைத் தன்மை, பற்றி எரியும் தன்மை,அரிக்கும் தன்மை, நச்சுத்தன்மை, அழியாமல் இருக்கும் தன்மை ஆகியவற்றை

உள்ளடக்கிய வரையறுக்கப்பட்ட அபாயகரமானகழிவுகள் விளைவிக்கும் ஆபத்துகள் பலவற்றைக் கொண்டுள்ள பொருள்கள் எடுத்துக்காட்டு: வடிகால் தூய்மை செய்யும்எண்ணெய்பூச்சு, இயக்கி (Motor) எண்ணெய், உறைதல் தடுப்பி, எரிபொருள், நஞ்சு பூச்சிக்கொல்லிகள், களைக்கொல்லிகள்எலிக்கொல்லிகள், ஒளிரும் விளக்குகள், விளக்கின் அடிப்பகுதி, புகை கண்டறியும் கருவி, மருத்துவக் கழிவுகள் தூய்மை செய்யும்சிலவகை வேதிப்பொருள்கள், மின்கலங்கள், காலணி மெருகு, ஒப்பனைப் பொருள் முதலியன.

41.**வீட்டு வார்கால்**என்பது சாக்கடை நீர் செல்வதற்காக ஒதுக்கப்பட்ட வழி அல்லது அதற்காக விடப்பட்ட சிறு நிலம் அல்லது சாக்கடை செல்லும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுவது அல்லது மலம், சீறுநீர் சாக்கடைக் குழிக்கு எளிமையாக செல்லக்கூடியது அல்லது நிரப்புவதற்கான பிற கொள்கலன் அல்லது பிற மாசுப் பொருள்கள் அதை அகற்ற ஆட்களை அமர்த்துவதுஅல்லது அங்கிருந்து இவ்வகைப் பொருள்களை அப்புறப்படுத்துவது.

42. **எரித்து சாம்பல் ஆக்குதல்** என்பது எரித்தல் அல்லது வெப்பத் திடக்கழிவை அதிக வெப்பநிலையில் சிதைக்கும் ஒருபொறியியல் செயல்முறை என்று பொருள்படும்,

43, **"மந்தங்கள்"** (இயக்க ஆற்றல் அற்றவை) என்பது மக்காத உயிரி கழிவுகள், மறுசுழற்சி செய்ய இயலாத அல்லது எளிதில்தீப்பற்றக்கூடிய தெருக்குப்பைகள் அல்லாத தூசிகள் மற்றும் மேற்பரப்பு வடிகால்கலிருந்து அகற்றப்பட்ட வண்டல் கழிவுகள் என்றுபொருள்படும்.

44. **முறை சாரா கழிவு சேகரிப்பாளர்** என்பதில் மறுசுழற்சி பொருட்களை பிரித்து, விற்பனை மற்றும் கொள்முதல் செய்யும்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தனிநபர்கள் சங்கங்கள் அல்லது கழிவு வர்த்தகர்கள் அடங்குவர்.

45. **திடக்கழிவு கசிவு (லீ சேட்ஸ்)** என்பது திடக்கழிவிலிருந்து கசியும் திரவப்பொருள் அல்லது மற்ற கழிவுகள் மற்றும்அதிலிருந்து கரைக்கப்பட்ட அல்லது தங்கியிருக்கும் பொருளிலிருந்து வரும் திரவக்கழிவு என்று பொருள்படும்.

46. **சிதறி கிடக்கும் குப்பை** என்பது தேவை இல்லை என எறிவதற்கும் ஒருங்கு சேர்ப்பதற்கும் இந்தத் துணைவிதிகளால்தடைஉள்ள அனைத்துப் பொருள்கள் அல்லது அசுத்தம் ஏற்படுத்தும் அல்லது ஆபத்து விளைவிக்கும் அல்லது பொதுநலக் காப்பிற்கும்,நலத்திற்கும் தொல்லையாய் விளங்கும் பொருள்கள்.

47. **குப்பை கொட்டுதல்** என்பது குப்பை அது விழுந்து, இறங்கி, காற்றில் பறந்து, அடித்துச்சென்று,கசிந்து அல்லது விலகி ஓடக்கூடியவாய்ப்புள்ளதாக இருக்கும் அல்லது. இல்லையெனில் விலகி ஓடி பொது இடத்திற்குள் அல்லது பொது இடத்தின்மேல் விழுந்து அல்லதுபொது இடத்திற்குள் அல்லது பொது இடத்தின்மேல் விழக் காரணமாக இருந்து, அல்லது அனுமதிப்பதாக இல்லாத இடத்தில்கொட்டுவதாகும்.

48. **"கரூர்மாநகராட்சி அமைப்பு"** இந்த விதிகளை பொறுத்தமட்டில்கரூர்மாநகராட்சி அமைப்புஎன்பது எத்தகைய பெயரில் இந்தியாவில் உள்ள வெவ்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் அழைக்கப்பட்டாலும்மாநகராட்சிகள் நகர் நிர்வாகம், நகராட்சி மன்றம், நகர் பாலிக்கா, நகர் பாலிகாபரிஷத் நகராட்சி வாரியம், நகரப்பஞ்சாயத்து மற்றும்பேரூராட்சி மக்கள் தொகை கணக்கெடுப்பு நகரங்களிலும் அறிவிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் அறிவிக்கப்படாத தொழிலக நகரியங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

49. **பொருட்கள் மீட்பு வசதிகள் (MRF)** என்பது விதி 2இல் குறிப்பிட்டுள்ள எளிதில் கூட்டு உரமாக்கப்படாததிடக்கழிவுகளைகரூர்மாநககாட்சி அமைப்பு அல்லது ஏதேனும் நிறுவனம் தற்காலிகமாக சேமித்து வைக்கும் வசதி என்று பொருள்படும் அல்லது ஒரு நபர் என்று பொருள்படும் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் செய்முறைபடுத்த அல்லது அகற்றுவதற்காக கழிவுகளை வழங்குவதற்கு முன் அல்லது எடுத்து செல்வதற்கு முன்னர் அனுமதிக்கப்பட்ட கழிவுகளை சேகரிக்கிற முறைசார துறை முறையற்ற மறுசுழற்சி செய்வோர் அல்லது கரூர்மாநகராட்சி மன்றத்தால் பணியமர்த்தப்பட்ட ஏனைய பணியாளர் அல்லது 2ஆம் விதியிப் குறிப்பிட்டுள்ள நிறுவனம், பல்வேறு கழிவு பொருள்களிலிருந்து பிரித்தல், தரம்பிரித்தல் மற்றும் மறுசுழற்சி செய்யதக்கவற்றை பெறுதல் ஆகியவை வசதி என்று பொருள்படும்.

"50. **நகராட்சி திடக்கழிவு(MSW)** என்பது பெரும் பகுதி வீட்டுக்கழிவாகவும் சில நேரங்களில் அதனுடன் நகராட்சியால் குறிப்பிட்ட பகுதியில் பெறப்பட்ட வணிகக் கழிவுடன் கூடியாத இருக்கும். இது அகாபகரமான தொழிற்சாலைக் கழிவு சேராதது இது திடக்கழிவாகவும் அரைப்பகுதி திடக்கழிவாகவும் இருக்கும்.

51 .**அணிமை இடம்** என்பது இயற்கை அமைப்பு மனைத்திட்டம், அதன் நிலை, அங்கு இருப்போர் என்பவற்றுடன் தெளிவாக வரையறுக்கப்பட்ட வட்டாரம் என்பது பொருள்.

52. **புதிய கட்டுமானம்** என்பது கரூர் மாநகராட்சி எல்லைக்குள்பொதுமக்களால் கட்டப்படும் அனைத்துக் கட்டடங்கள் என்பது பொருள்.

53. **மக்காத உயிரிக் கழிவு** என்பது வாழும் பிற உயிரினங்களால் பிரிக்க இயலாக கழிவுகள் என்று பொருள்படும்.

54. **தொல்லை** என்பது தீங்கு, அபாயம், எரிச்சலூட்டுதல் ஏற்படுத்த காரணமாக உள்ள செயல்பாடு, இடம் அல்லது பொருள் ஆகியனவும் அல்லது பார்வை, முகர்தல், கேட்டல் ஆகியவற்றிற்கு அருவெறுப்பாக உள்ளதும் அல்லது உயிருக்கு ஆபத்தாக உள்ளதும் அல்லது உடல் நலத்திற்கு அல்லது சொத்துக்குக் கேடாக உள்ளதும் தொல்லைத் தருவதாகும்.

55. **தொல்லை கண்டறிபவர் (ND)** என்பது பொதுத் தொல்லை மற்றும் இதர நடவடிக்கைகளைக் கண்டறிவதற்காக ஆணையாளரால் நியரிக்கப்பட்ட/தெரிவுசெய்யப்பட்ட ஊழியர் என்று பொருள்படும்.

56. **குடியிருப்போர்/தங்கியிருப்போர்** என்பது நிலம் அல்லது கட்டடம் அல்லது அவற்றின் பகுதியை வாடகைக்குக் கொண்டு தற்காலிகமாக அல்லது பிறவகையில் தன் பயன்பாட்டில் வைத்திருப்போர்.

57. **வசதி ஒன்றை இயக்குபவர்** என்பது திடக்கழிவுகளை கையாளுவதற்கான வசதி ஒன்றை உடைமையாக பெற்றுள்ள அல்லது இயக்குகிற ஒரு நபர் அல்லது நிறுவனம் என்று பொருள்படும். அவர்கள், கரூர் மாநகராட்சியால் நியமிக்கப்பட்ட நிறுவனமாகவோ, முகவரமைப்பாகவோ இருக்கும்.

58.**உரிமையாளர்** என்பது கட்டடம் அல்லது நிலம் அல்லது அவற்றின் பகுதிக்கு சொந்தம் கொண்டாடும் உரிமையாளர்.

59. **ஆள் (Person)** என்பது ஒரு தனி ஆளை அல்லது ஆட்களைக் குறிக்கும். இது கடைஅல்லது நிறுவனம் அல்லது கூட்டு வணிக நிலையம் அல்லது குழுமம் அல்லது சங்கம் அல்லது ஒருங்கிணைந்த அல்லது ஒழுங்கு இணையாக தனியாள் கூட்டமும் அவர்களது முகவர்களும் முகவர்களும் ஆகியவற்றை உள்ளடக்கியது.

60. **பொது இடம்** என்பது சாலை, முக்கியமான உயர்ந்த வளைவுச் சாலை, நதி அல்லது பள்ளத்தாக்கு முதலியவற்றை கடக்கும் இரயில் (அ) சாலை வாராவதி சந்து, நடைபாதை அல்லது வழிப்பாதை, நெடுஞ்சாலை தரைப்பாலம், நடைவழி, குறுகிய சந்து (குறுகிய வழி, சதுர குறுகிய வழி பொது ( வழி) சாலை அல்லது பொதுவில்லா சாலை, பூங்காக்கள், தோட்டங்கள், பொழுதுபோக்கு மைதானங்கள், விளையாட்டு மைதானங்கள், கடற்கரைகள், நீர் நிலைகள், நீர் செல்லும் வழிகள் பொது பிளாஸாக்கள் உலவும் இடம். அரசு மற்றும் நகராட்சி கட்டடங்கள், பொது மருத்துவமனைகள், இறைச்சிக் கொட்டில்கள், நீதிமன்றங்கள் முதலியன, "

61. **குறிப்பிட்ட சிற்சில இடத்திலிருந்து சேகரிப்பு (Point to Point Collection)** என்பது கரூர் மாநகராட்சி தேர்ந்தெடுத்த குறிப்பிட்ட இடத்திலிருந்து மாநகராட்சி திடக்கழிவின் சேகரிப்பு அமைப்புமுறையாகும். அவ்விடம் குப்பை உருவாக்குவோர் ஒருங்கு சேர்த்துச் சேமித்து வைத்ததைக் கொள்கலன் பொருத்திய வண்டிக்கு அல்லது கரூர் மாநகராட்சி அமர்த்திய வாகனத்திடம் ஒப்படைத்தலுக்காகக் கொண்டு வரவேண்டும் என்று பொருள்படும்.

62 .**வளாகம்** என்பது ஒரு கட்டத்தில் குடியிருப்பு மனை, வீடு, புறவீடு, கொட்டில், கொட்டகை கொட்டாரம், குடிசை, செங்கல் சேறு மரம், உலோகம் அல்லது பிற வேறு ஏதாவது உலோகப்பொருள் உள்ள பிறகட்டுமானத்தின் ஏதாவது அமைப்பு ஒப்பந்தத்தில் இருக்கும். திறந்த அல்லது அடைக்கப்பட்ட கட்டடம் கட்டிய அல்லது கட்டடம் இல்லாத நிலங்கள் இருந்தாலும் தற்போதைக்கு குடியிருப்பாகப் பயன்படுத்தாதவை, வணிகம், தொழில், சேவை, வேலை, அரசு அல்லது பொது நிறுவனம் அல்லது திருமணங்கள், பொதுவிருந்து கூட்டங்கள், கண்காட்சிகள், ஏற்பாடு செய்யப்பட்ட நிகழச்சிகள் போன்ற தனியார் நோக்கத்தில்செயல்படுபவை ஆகியவற்றை உள்ளடக்கியது. மேலும் வாகனம் நிறுத்துவதற்கு தெரு விற்பனைக்கு பணியிடத்தில் பொருள்களைவைப்பதற்கு அல்லது ஏதாவது பொது இடத்தில் தனியார் நோக்கக்கத்திற்கு சரக்கு வண்டியின்

இயக்கம்மல்லாத பிற எதுவாக இருந்தாலும் ஆணையாளரால் தற்போதைக்கு அனுமதிக்கப்பட்ட பொதுச்சாலையின் பகுதி.

63. **முதன்மை சேகரிப்பு** என்பது கழிவுகளில் உற்பத்திக்கு ஆதாரமான வீடுகள், கடைகள் அலுவலகங்கள் மற்றும் ஏனைய யாதொருகுடியிருப்பு இல்லாத வளாகங்கள் அல்லது யாதொரு சேகரிப்பு மையங்கள்கரூர் மாநகராட்சியால் குறிப்பிட்டுள்ள மையங்களிலிருந்து பிரிக்கப்பட கழிவுகள் சேகரித்தல், சுமை ஏற்றுதல் மற்றும் அகற்றுதல் என்று பொருள்படும்.

64. **செய்முறைப்படுத்துதல்** என்பது யாதொரு அறிவியல் சார்ந்த செயல்முறைப்படுத்துதல் என்று பொருள்படும். இதில்திடக்கழிவுகளை மறு பயன்பாட்டிற்காக, மறு சுழற்சிக்காக பிரிக்கப்பட்ட புதிய பொருளாக மாற்றுவதற்காக கையாளப்படுகிறது.

65 **திட்டப் பொறியாளர் (Project Engineer)** என்பது கரூர் மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைத்திட்டப்பணிகளை செயல்படுத்த ஆணையாளரால் நியமிக்கப்பட்ட ஒரு பொறியாளர்.

66. **கொள்கலன் (Receptacle)** என்பது திடக்கழிவுகளைசேர்த்து வைக்க பயன்படுத்தும் தொட்டி மற்றும் பை போன்றகொள்கலன்கள்.

67. **மறுசுழற்சி (Reclying)** என்பது பிரிக்கப்பட்ட மக்காத உயிரி திடக்கழிவுகளை மூலத்தயாரிப்புகளை ஒத்திருக்கிற அல்லது ஒத்திராத புதிய தயாரிப்புகளை உற்பத்தி செய்வதற்கான புதிய பொருளாக அல்லது தயாரிப்பு பொருளாக அல்லதுமூலப்பொருளாக மாற்றுவதற்கான செய்முறை என்று பொருள்படும்.

68. **மறுசுழற்சி செய்யத்தக்க கழிவுகள்** என்பது நகராட்சி திடக்கழிவுகளில் பொதுவாகக் காணப்படும் குப்பையாகும். இதுஉலர் கழிவு என்றும் அழைக்கப்படும். இது பலவகை கண்ணாடிகள், காகிதம், உலோகம், நெகிழி ஜவுளி, மின்னணுப் பொருள்கள்,போன்றவற்றை உள்ளடக்கியது.

69.**மறு வளர்ச்சி** என்பது பழைய குடியிருப்புகள் அல்லது வணிக கட்டடங்களை பழுதடைந்து நிலையில்இருக்கும் அக்கட்டடங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்புகள் உள்ள அதே இடத்தில் மீண்டும் கட்டி எழுப்புதல் என்று பொருள்படும்.

70. **இருக்கும் வடிவத்தில் உருவாக்குவோரால்** நுகர, பயன்படுத்த செயல்முறைக்கு உற்படுத்த இயலாதது தேவையற்றதுஎன்று விலக்கிய பொருள் ஆகும். இது பல்வேறு, செயல்பாடுகளால், செய்முறைகளால் உயிரிமைக்கும், உயிர் மக்காத வகையில்மறுசுழற்சி இயல்பு கொண்ட, திடவடிவில் அல்லது அரை திட வடிவில் ஏற்படுபவை ஆகும்.

71. **மறுத்து பெறப்படும் எரிபொருள்**(RDF) என்பது எளிதில் தீப்பற்றக்கூடிய திடக்கழிவின் பகுதியான குளோரின் கலந்தபொருட்களை தவிர நெகிழி, மரம், மரக்கூழ் அல்லது உயிரக போன்ற திடக்கழிவுகளிலிருந்து உலர்த்துதல், துண்டு துண்டுகளாகசிதைத்தல், நீர்க்கூற்றினை அகற்றுதல், சுருக்குதல்ஆகியாவற்றின் மூலம் சிறு மணிகள் ஆல்லது இழைக்கற்றை வடிவில் பெறுகிற'எரிபொருள் என்று பொருள்படும்.

72. **எஞ்சிய திடக்கழிவு** என்பது மறுசுழற்சிக்கோ, மேற்கொண்டு செயல்முறை படுத்துவதற்கோ பயன்படாத கழிவு மற்றும்திடக்கழிவுகள் செய்முறை வசதிகளிலிருந்து நிராகரிக்கப்பட்ட திடக்கழிவு என்று பொருள்படும்.

73.**சுகாதார முறையில் கழிவுகளை கொட்டிப்புதைத்தல்** என்பது எஞ்சிய திடக்கழிவு மற்றும் நிலத்தின் மீதிருக்கும்இயக்க ஆற்றலற்ற கழிவுகளை நிலத்தடி நீர், நில மேற்பரப்பு நீர் மற்றும் காற்றிலிருந்து தூசிகள் ஊறு விளைவிக்கும் காற்று, துர்நாற்றம்,தீ ஆபத்து, விலங்கு அச்சுறுத்துதல், பறவை அச்சுறுத்துதல், செல்லப்பிராணிகள் அல்லது கொறித்துண்ணிகள், பசுமை வீடு வாயுவெளியேறுதல் தொடர்ச்சியான கரிம மாசுகள் சாய்வு ஸ்திரமின்மை மற்றும் மண் அரித்தல் போன்றவற்றிலிருந்து பிரித்யேகமாகவடிவமைக்கப்பட்ட பாதுகாப்பு காரணிகனைக் கொண்டு கடைசி மற்றும் பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துதல் என்றுபொருள்படும்.

74. **சுகாதார பள்ளம் நிரப்பு வசதி** என்பது திடக்கழிவுகள் எஞ்சும் பகுதி நிலந்தடி நீர் / மேற்பரப்பு நீர் மாசுபடுவதற்கு மற்றும் காற்று, தூசு, காற்றில் பறந்து வரும் குப்பை, தூர் நாற்றம், தீயினால் ஏற்படும் இடையூறு பறவை, பூச்சி அல்லது எலி அச்சுறுத்தல்,பசுமைச்சூழல் வாயு (Green House Gas) வெளிப்பாடு, சரிவு உறுதியற்ற தன்மை, அரிப்பு ஆகியவற்றிற்கு எதிராகப் பாதுகாப்பானவகையில் வடிவமைத்து சேர்க்கும் குப்பைகளை கொட்டும் இடம் ஆகும்.

75. **சுகாதாரக் கழிவுகள்** என்பது பயன்படுத்தப்பட்ட குழந்தை டயாபர்கள், பெண்கள் பயன்படுத்தும் சுகாதாரநாப்கின்கள் அல்லது துடைப்பான்கள் உறிபஞ்சுள், ஆணுறைகள், தாள்கள் மற்றும் இன்னபிற கழிவுங்களை உள்ளடக்கிய கழிவுகளை குறிப்பதாகும்.

76.**தூய்மைப் பணியாளர்** என்பது திடக்கழிவுகளைப் பெறுவதற்காக அல்லது அப்புறப்படுத்துவதற்காக அல்லது கரூர்மாநகராட்சி பகுதியிலுள்ள சாக்கடையைத் தூய்மைப்படுத்துவதற்காக மாநகராட்சி அல்லது முகமையாலோ பணியமர்ந்தப்பட்ட பணியாளர்.

77. **சுகாதாரம்** என்பது உடல் நலம் பேணுதலும் நோயினைதடுத்தலும் உடல்நலமில்லை நிலைத் தொடர்பான சூழல்காரணிகளாக பிற விளைவுகளைத் தடுத்தல் ஆகும்.

78. **அட்டவணை** என்பது இந்தத் துணை விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையை குறிப்பதாகும்

79.**இரண்டாம் நிலை கழிவு சேமிப்பு** என்பது இரண்டாம் நிலை கழிவு சேமிப்பு இடங்களில் அல்லது பொருட்கள் மீட்பு (MRF) அல்லது செய்முறை அல்லது அகற்றுகிற பணிகளுக்கு கொண்டு செல்வதற்காக அமைக்கப்பட்ட தொட்டிகளிலிருந்து எடுக்கப்பட்ட திடக்கழிவுகளை தற்காலிகமாக சேமித்து வைத்தல் என்று பொருள்படும்.

80. **பிரித்தெடுத்தல்** என்பது பலதரப்பட்ட திடக்கழிவுகளான இயற்கையாக மக்காத கழிவுகளான இடிக்கப்பட்ட மற்றும் கட்டடக் கழிவுகள், வீட்டிற்குரிய அபாயகரமான

கழிவுகள், மறுசுழற்சி செய்ப முடியாத இயக்க ஆற்றலற்ற கழிவுகள் மற்றும் சுகாதாரக் கழிவுகள் மற்றும் மறுசுழற்சி செய்ய முடியாத எரியக் கூடிய கழிவுகள் இயற்கையாக மக்கும் கழிவுகளான விவசாய மற்றும் பால்பொருள் கழிவுகள் ஆகியயற்றை வகைப்படுத்துதல் மற்றும் பிரித்தெடுத்து சேமித்தல் என்று பொருள்படும்.

81.**சேவை வழங்குவோர்** என்றால் பொதுப் பயன்பாட்டுச் சேவையான மின்சாரம், வடிகால், சாலைகள், தொலைபேசி, கழிவுநீர்,நீர் போன்றவற்றை வழங்கும் ஓர் அதிகார மன்றம் என்று பொருள்படும்

82.**திடக்கழிவு** என்பது திடக்கழிவு மற்றும் திடக்கழிவு அல்லாத வீட்டிற்குரிய கழிவு, சுகாதார கழிவு, வியாபாரக் கழிவு, நிறுவனம் சார்ந்த கழிவு, உணவகம் மற்றும் சந்தை கழிவு மற்றும் இதர குடியிருப்பில்லாக் கழிவுகள், சாலைக் கழிவுகள், மேற்பரப்பு வடிகாலிலிருந்து எடுக்கப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட வண்டல்கள், தோட்டக் கழிவுகள் வியசாய மற்றும் பால்பொருள் கழிவுகள், கரூர்மாநகராட்சியின் கீழ் உள்ள பகுதிகளிலிருந்து உருவாக்கப்பட்ட தொழிலக கழிவு நீங்கலாக கதிரியக்கமுள்ள கழிவுகள், மின்கலக் கழிவுகள், கணினிக் கழிவுகள், சுத்திகரிக்கப்பட்ட உயிரி மருத்துவ கழிவுகள் மற்றும் விதி 2 இல் சொல்லப்பட்டுள்ள இதர கழிவுகள் என்று பொருள்படும்.

83.**வகைப்படுத்தல்** என்பது மறுசுழற்சிக்கு ஏற்றவாறு கலவையான கழிவுகளிலிருந்து மறுசுழற்சிப் பொருள்களான காகிதம்,பிளாஸ்டிக், அட்டைகள், உலோகங்கள், கண்ணாடி முதலியவற்றை மறுசுழற்சி செய்யத்தக்க பல்யேறு கூறுகள் மற்றும் வகைப்பாடுகளாக பிரித்தெடுத்தல் என்று பொருள்படும்.

84. **மூலர்** என்பது கழிவு உருவாகும் வளாகம் அல்லது உரிமையாளர் பயன்படுத்தும் சமூக ஒருங்கு சேர்ப்பு மையம்/தங்கி இருப்போரின் திடக்கழிவுகளை பிரித்து ஒருங்கு சேர்ப்பதற்காக ஒன்று அல்லது அதிகமான வளாகங்கள்.

85.**காளாஞ்சி** என்பது எச்சில் துப் வதற்குப் பயன்படுத்தும் வைத்தூற்றி (Funnel) போன்ற வாய் அமைப்புடைய உலோகம் அல்லது மண் ஏனம்.

86.**நிலைப்படுத்தல்** என்பது மண் நிவாரணம், மண் அரிப்பு கட்டுப்பாடு மற்றும் விவசாய நிலத்திற்குப் பயன்படுகிற மற்றும் பாதிப்பு ஏற்படுத்தும் தூர்நாற்றங்கள் அல்லது திரவக்கசிவு ஏற்படுத்தாதவாறு நிலைப்படுத்தும் நிலைக்கு இயற்கையாக மக்கும் உயிரிக்கழிவுகளை. உயிரி முறையில் சிதைத்தல் என்று பொருள்படும்.

87. **நிலைப்படுத்தப்பட்ட உயிரி மக்கும் கழிவு** என்பது உயிரியல் அமைப்பில் நிலைப்படுத்தப்பட்ட (நோய்க்கிருமிகள்இல்லாத) கழிவு ஆகும். உயிரி மக்கும் கழிவின் இயந்திர உயிரியல் சிகிச்சை விளைவாக உருவாவது. இது இக்கழிவுநிலைப்படுத்தப்பட்ட பின்பு எவ்வகைக் கட்டுப்பாடும் இல்லாமல் பயன்படுத்த தகுதியாகும்.

88. **தெரு வியாபாரி**என்பவர் பொருட்கள், சரக்குகள், விற்பனைப் பொருட்கள், தின்பண்டங்கள் அவ்லது தினசரிபயன்பாட்டிற்கு உபபோகப்படும் பொருட்கனை விற்பவர் அல்லது தற்காலிகமாக எழுப்பிய கட்டடங்களிலிருந்து இன்னபிறதனியார்பகுதி அல்லது

பொது இடம் அல்லது பொது பூங்காக்கள், சாலையோரம், நடைபாதை ஓரங்கள் சந்துகள் தெருக்கள் ஆகிய இடங்கள்.

89. **ஒழுங்கு சேர்த்தல்**திடக்கழிவுகளை தற்காலிகமாகக் கட்டுப்படுத்துதல், குறிப்பிட்ட வகையில்குப்பைசேர்தல், வெக்டார்களால் கவர்தல்,தெரு விலங்கு மற்றும் மிகுதியான துர் நாற்றம் ஆகியவற்றைத் தடுத்தல் ஆகும்.

90. **டிஎன்பிசிபி (TNPCB)** என்பது தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடுவாரியம் எனும் அரசு நிறுவனம்.

91. **மாற்று நிலையம்**என்பது சேகரிப்புப் பகுதிகளிலிருந்து திடக்கழிவுகளைப் பெறுவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு வசதி என்று பொருள்படும். இவை, அகற்றல் பணிகளுக்கு அல்லது கழிவு செய்முறைக்காக மூடிய வண்டிகள், அல்லது சரக்கு வண்டிகள் மூலம் அதிக அளவில் எடுத்துச் செல்லப்படும்.

92.**கொண்டு செல்லுதல்** என்பது துர்நாற்றம், துப்புரவற்றநிலை, மற்றும் காண சகிக்காத நிலை ஆகியவற்றை தடுக்கும் பொருட்டு சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு திடக்கழிவுகளை சுத்திகரித்து அல்லது ஓரளவு சுத்திகரிப்பு அல்லது சுத்திகரிக்காமல் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட மற்றும மூடிய நிலையில் எடுத்தும் செல்லும் வகையில் திடக்கழிவுகளைக் கொண்டு செல்லுதல் என்று பொருள்படும்.

93.**சுத்திகரிக்கும் முறை** என்பது தீங்கின் அளவு மற்றும் வாய்ப்பினைக் குறைக்க கழிவுகளைச் சிதைத்தல் அல்லது
இயற்பியல் வேதியியல் அல்லது தன்மையுடையவையாக மாற்றியமைத்தலுக்காக வடிவமைக்கப்பட்ட முறை, தொழில் நுட்பம் அல்லது செய்முறை என்று பொருள்படும்.

94.**பயணர் கட்டணம்** என்பது கழிவு உருவாக்குபவரிடம், சேகரித்தல் கொண்டு செல்லுதல், செய்முறைப்படுத்துதல் மற்றும் ஒருவகை செய்தலுக்காக கரூர் மாநகராட்சி மற்றும் விதி 2இல் குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒரு நிறுவனத்தால் விதிக்கப்படும் கட்டணம் என்று பொருள்படும்.

95. **வெற்றிடமனை** என்பது பயன்படுத்தாமலிருக்கும் தனியார் குழுவுக்கு / தனியாளுக்குச் சொந்தமான நிலம் அல்லது திறந்தவெளி.

96. **மண் புழு உரமாக்கல்** என்பது மண் புழுவைப் பயன்படுத்தி இயற்கையாகமக்கும் உயிரி கழிவுகளை உரமாக மாற்றும் செயல்முறை ஆகும்.

97.**மண்டல அலுவலகம்** என்பது கரூர் மாநகராட்யின் உதவி ஆணையாளரால் நிர்வகிக்கப்படும் ஒரு நிர்வாகப்பிரிவு அலுவலகம் என்பது பொருள்.

98.**கழிவு உருவாக்குபவர்** என்பது திடக்கழிவை உருவாக்கும் தனிநபர் அல்லது குழு ஒவ்வொரு குடியிருப்பு வளாகங்கள்,இந்திய ரயில்வே உட்பட்ட குடியிருப்பு அல்லாத நிறுவனங்கள், பாதுகாப்பு நிறுவனங்கள் ஆகியோர் என்று பொருள்படும்.

99 .**கழிவு படிநிலை** என்பது திடக்கழிவினை கொட்டி புதைப்பதற்கு குறைந்த முக்கியத்துவம் அளித்தும், பாதுகாப்பிற்குமிகுந்த முக்கியத்துவம் கொடுத்தும், அகற்றல், மீட்டெடுப்பு, மறுசுழற்சி, மறுபயன்பாடு, குறைத்தல் மற்றும் பாதுகாத்தல்

ஆகியவற்றைவலியுறுத்துவதன் மூலம் திடக்கழிவிற்கான முன்னுரிமை வரிசை நிரூப்பிக்கப்பட வேண்டும் என்று பொருள்படும்.

100. **கழிவு பொறுக்குபவர்** என்பது வாழ்வாதாரத்திற்காக இடையீட்டாளர் மூலம் அல்லது நேரடியாக மறு சுழற்சியாளர்களிடம் –விற்பனை செய்வற்காக, கழிவு உருவாகிய இடமான சாலைகள்,குப்பைத் தொட்டிகள் பொருள் மீட்கும் இடங்கள், செய்முறைப்படுத்தும்இடங்கள், ஒருவகை செய்யும் இடங்கள் ஆகியவற்றிலிருந்து மீண்டும் பயன்படுத்தத்தக்க மற்றும் மறுசுழற்சி செய்யத்தக்கதிடக்கழிவுகளை சேகரிக்கிற மற்றும் மீட்கிற ஒரு நபர் அல்லது ஒரு குழுவைச் சேர்ந்த நபர் என்று பொருள்படும்.

## 4.0 குப்பை கொட்டுவதற்கும் தொல்லை ஏற்படுத்துவதற்கும் தடையும் தூய்மைப் பகுதிக்கு உறுதியும்

4.1 **பொது இடத்தில் குப்பை கொட்டுதல்** அதற்காக ஒதுக்கப்பட்ட பொது அல்லது தனியார் கொள் இடங்களைத் தவிர யாரும்பொது இடங்களில் குப்பைகளை எறியவோ கொட்டவோ கூடாது.

4.2. **தனியார் சொத்தில் குப்பை கொட்டுதல்**: கைக்கொள்ளப் பட்டிருந்தாலும் இல்லாமலிருந்தாலும் அதிகாரம் வழுங்கப்பட்டதனியார் அல்லது பொது கொள்கரத்தைத் தவிர்த்து யாரும் கைக்கொள்ளடப்படாத காலி இடத்தில் குப்பையை எறியவோ கொட்டவோகூடாது.

4.3**வாகனங்களிலிருந்து குப்பையை எறிதல்**: ஓட்டுநராக இருந்தாலும் பயணியராக இருந்தாலும் யாரும், தெரு, சாலை, ஒர நடைபாதை,விளையாட்டு மைதானம், தோட்டம், போக்குவரத்து வட்டாரம் ஆகிய இடங்களில் அல்லது பிற பொது இடங்களில்குப்பையை எறியயோ கொட்டவோ கூட்டாது.

4.4 **குப்பை கொண்டு செல்லும் வாகனம்** ஏற்றும் சுமைகள் பறந்து அல்லது விழுந்து சாலை, ஓரநடைபாதை, போக்குவரத்துவட்டாரம், விளையாட்டு மைதானம், தோட்டம், அல்லது வேறு பொது இடம் ஆகியவற்றில் குப்பை ஏற்படுத்தாத வகையில் வாகனம் அமைத்திருக்காத திறந்த சரக்கு வண்டியை அல்லது பிறவாகனங்களை யாரும் ஓட்டவோ அல்லது இயக்கவோ கூடாது.

4.5 **பொதுக் தொல்லை ஏற்படுத்துதல்**: யாரும், அது அதற்கான பொது வசதியுள்ள இடத்தைத் தவிர்த்து வேறு இடங்களில்குளித்தல், துப்புதல், சிறுநீர் கழித்தல், மலம்கழித்தல், விலங்கு/பறவைக்குத் தீனி கொடுத்தல், வாகனங்களைப் பழுதுபார்த்தல்கழுவுதல், சமையல் பாத்திரங்களை அல்லது வேறு பொருள்களைக் கழுவுதல்/ தூய்மைப்படுத்துதல் அல்லது எந்தப் பொது இடத்திலும்எந்த வகையான பொருள்களையும் சேமித்து வைத்தல் செய்ய கூடாது.

4.6**தூய்மைப் பகுதிக்கு உறுதி**: ஒவ்வொருவரும் எந்தப் பொது இடத்திலும், உரிமையாளர் அல்லது தங்கியிருப்போரானயாரும், வளாகத்தின் முன்னும் அல்லது சுற்றியுள்ள பகுதியுமான நடைபாதை, திறந்த சாக்கடை / வாறுகால், நடைபாதை ஓரங்கல்

(Kerb)ஆகியன திடக்கழிவு அல்லது திரவக்கழிவு எதுவும் இல்லாமல் தூய்மையாக இருக்க உறுதிப்படுத்த வேண்டும்.

5.0 கழிவு உருவாக்குபவர்களின் கடமைகள்:

5.1 **ஒவ்வொரு கழிவு உருவாக்குபவரும்**

(அ) இயற்கையாக மக்கும் உயிரி கழிவுகள் இயற்கையாக மக்காத உயிரி கழிவுகள் மற்றும் வீட்டிற்குரிய அபாயகரமானகழிவுகள் என்று மூன்று வகையாகப் பிரித்தெடுத்து அதற்குரிய தொட்டிகளில் சேமித்து அவற்றை கரூர் மாநகராட்சிஅமைப்புகளால் அவ்வப்போது அளிக்கப்படும் கட்டளை மற்றும் வெளியிடுகிற அறிவிக்கைகளில் உள்ளவாறு அனுமதியமளிக்கப்பட்டகழிவு சேகரிப்பவர் மற்றும் கழிவு பொறுக்குபவரிடம் அவற்றை ஒப்படைக்க வேண்டும்.

(ஆ) பயன்படுத்தப்பட்ட சுகாதார கழிவுகளான, டயாபர்கள், பெண்கள் பயன்படுத்தும் நாப்கின்கள், சுகாதார பஞ்சுகள் ஆகியவைகரூர் மாநகராட்சி அமைப்புகளால் அறிவுறுத்தப்பட்டவாறு தகுந்த மறைபொருட்கள் அல்லது அந்தப்பொருளின்தர உரிமையாளரின் அல்லது தயாரிப்பாளர்கள் வழங்கிய சிறு பைகள் மூலம் பாதுகாப்பாக சுற்றப்பட்டிருக்க வேண்டும். மேலும்அதனை இயற்கையாக மக்காத உயிரிக்கழிவுகள் அல்லது உலர்ந்த கழிவுகளுக்கான தொட்டிகளில் இடவேண்டும்.

இ) அவ்வப்போது உருவாக்கப்பட்ட கட்டட மற்றும் இடிபாடுகள் கழிவுகளை அவரவர் இடத்திலேயே சேமித்து வைத்திருக்கவேண்டும் மற்றும் 2016 ஆம் ஆண்டு கட்டட மற்றும் இடிபாடுகள் கழிவு மோண்மை விதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு அகற்ற வேண்டும்.
ஈ) ஒருவரால் உருவாக்கப்பட்ட பூந்தோட்டம் மற்றும் தோட்டக்கழிவுகளை அவ்வாறு உருவாக்கியவரின் இடத்திலேயே சேமித்துவைத்திருக்க வேண்டும் மற்றும் அவ்வப்போது அளிக்கிற கரூர் மாநகராட்சி அமைப்புகளின் அறிவுறுத்தலின்பேரில் அவற்றைஅகற்ற வேண்டும்.

5.2 எந்த ஒரு கழிவு உருவாக்குபவரும், நீர் நிலைகள் அல்லது வடிகால்கள் அல்லது பொதுவெளியிடம் அல்லது சாலைகளில் உருவாக்கிய கழிவை, புதைக்கவோ, எரிக்கவோ அல்லது தூக்கி எறியயோ கூடாது.

5.3 அனைத்து கழிவு உருவாக்குபவரும்கரூர்மாநகராட்சி மன்ற துணை விதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு, திடக்கழிவுமேலாண்மைக்கு அத்தகைய பயன்பாட்டு கட்டணத்தை செலுத்த வேண்டும்.

5.4 எந்த ஒரு நபரும், கரூர் மாநகராட்சி மன்றத்திடம் குறைந்தது மூன்று தினங்களுக்கு முன்னர் தெரிவிக்காமல்,நூறு நபர்களுக்கு மேல் கூட்டி எந்தவொரு உரிமமில்லாத இடத்திலும், எந்தவிதமான நிகழ்ச்சியோ, கூட்டமோ நடத்தக்கூடாது மற்றும்அந்த நபர் அல்லது அந்த நிகழ்ச்சியை நடத்துபவர் கழிவு உருவாக்கிய அந்த

இடத்திலிருந்து சுழிவினை பிரித்தெடுத்து கரூர்மாநகராட்சி அமைப்பால் குறிப்பிடப்பட்ட கழிவு சேகரிப்பவர் அல்லது முகவாண்மையிடம் அவற்றை ஒப்படைப்பு செய்ய வேண்டும்.

5.5. ஒவ்வொரு தெரு வியாபாரியும் அவரவர் சம்பந்தமான கழிவுகளான பழங்கள், காய்கறிகள், மீதம் உள்ள உணவு தேங்காய்சிரட்டைகள், உறைகள், கொள்கலன்கள், கோப்பைகள், தூக்கி எறியப்படும் தட்டுகள் மற்றும் உணவு கழிவுகளை சேமிக்கும் வகையில்உரிய தொட்டிகள் வைத்திருக்க வேண்டும் மற்றும் அந்த கழிவுகளை கரூர்மாநகராட்சி அமைப்பால் அறிவிக்கை செய்யப்பட்டகழிவு சேமிப்பு தொட்டிகள் அல்லது வாகனத்தில் கொட்ட வேண்டும்.

5.6 அனைத்து குடியிருப்போர் நலச்சங்கங்கள் மற்றும் சந்தை சங்கத்தினர் இந்த விதிகள் வெளியிட்ட ஒரு ஆண்டிற்குள் கரூர் மாநகராட்சி அமைப்புடன் கூட்டாக இணைந்து இந்த விதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு, கழிவுகள் உருவாக்கப்பட்ட இடத்தில் அவற்றை பிரித்தெடுக்கப்படுவதையும் பிரித்தெடுத்த கழிவுகள் தனித்தனியாக சேகரிக்கப்படுவதையம். மறு சுழற்சிசெய்யக்கூடிய பொருட்களை அங்கீகரிக்கப்பட்ட கழிவு பொறுக்குபவர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட மறு சுழற்சியாளர்களிடம் ஒப்படைப்பு:செய்யப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும். அந்த இயற்கையாக மக்கும் தன்மையுடைய உயிரிக்கழிகளை முடிந்தால் அந்தஇடத்திலேயே செய்முறை மற்றும் கூட்டு உரமாக்கல் மூலம் ஒருவகை செய்யப்படும் அல்லது உயிரி–மீத்தேனாக்கம் செய்யப்படவேண்டும் வண்டல் கழிவுகளை கரூர் மாநகராட்சி அமைப்பால் குறிப்பிடப்பட்ட கழிவு சேகரிப்பவர் அல்லதுமுகவாண்மையாளர்களிடம் அளித்திட வேண்டும்.

5.7. 5,000 சதுரடிக்கு மேலுள்ள அனைத்து வாயில்களைக்கொண்ட சமுதாயங்கள் மற்றும் நிறுவனங்கள் இந்த விதிகள்வெளியிடப்பட்ட ஒரு ஆண்டிற்குள்கரூர்மாநகராட்சி அமைப்புடன் கூட்டாக இணைந்து இந்த விதிகளில்குறிப்பிட்டுள்ளவாறு, கழிவுகள் உருவாக்கப்பட்ட இடத்தில், கழிவுகள் பிரித்தெடுக்கப்படுவதையும், பிரித்தெடுத்த கழிவுகள்தனித்தனியாக சேகரிக்கப்படுவதையும் மறு சுழற்சி செய்யக்கூடிய பொருட்கள் அங்கீகரிக்கப்பட்ட கழிவு பொறுக்குபவர் மற்றும்அங்கீகரிக்கப்பட்ட மறு சுழற்சியாளர்களிடம் ஒப்படைப்பு செய்யப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும். அந்த இயற்கையாக மக்கும் தன்மையுடைய உயிரிய கழிவுகளை முடிந்தால் அந்த இடத்திலேயே செய்முறை மற்றும் கூட்டு உரமாக்கல் மூலம் ஒருவகை செய்யப்பட வேண்டும் அல்லது உயிரி – மீத்தேனாக்கம் செய்யப்பட வேண்டும். வண்டல் கழிவுகளை கரூர் மாநகராட்சி அமைப்பால்குறிப்பிடப்பட்ட கழிவு சேகரிப்பவர் அல்லது முகவாண்மையாளர்களிடம் அளித்திட வேண்டும்.

5.8 அனைத்துஉணவகங்கள் மற்றும் உணவு விடுதிகள் இந்த விதிகள் வெளியிடப்பட்ட 30 தினங்களுக்குள் கரூர்மாநகராட்சி அமைப்புடன் கூட்டாக இணைந்து, இந்த விதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு கழிவுகள் உருவாக்கப்பட்ட இடத்தில், கழிவுகள்பிரித்தெடுக்கப்படுவதையும், பிரித்தெடுத்த கழிவுகள் தனித்தனியாக சேகரிக்கப்படுவதையும் மறு சுழற்சி செய்யக்கூடியபொருட்களை அங்கீகரிக்கப்பட்ட கழிவு பொறுக்குபவர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மறு சுழற்சியாளரிடம் ஒப்படைப்பு செய்யப்படுவதையும்அந்த இயற்கையாக மக்கும் தன்மையுடைய உயிரி கழிவுகளை முடிந்தால் அந்த இடத்திலேயே செய்முறை மற்றும் கூட்டு உரமாக்கல்மூலம் ஒருவகை

செய்யப்பட வேண்டும்அல்லது உயிரி–மீத்தேனாக்கம் செய்யப்பட வேண்டும். வண்டல் கழிவுகளை கரூர்மாநகராட்சி அமைப்பால் குறிப்பிடப்பட்ட கழிவு சேரிப்பவர் அல்லது முகவாண்மையாளர்களிடம் அளித்திட வேண்டும்.

5.9 பிரிந்த கழிவுகளை ஒப்படைத்தல் அடுக்குமாடிக் கட்டடம் / சமுதாய அளவு / கூட்டுறவு சங்கம் ஆகிய இடங்களில் குப்பை உருவாரும் இடத்தில் அல்லது குப்பையை ஒப்படைக்கும் இடத்தில், குப்பையை ஒப்படைக்கும் இடத்தில்/ தனித்தனியாக வைக்கவேண்டும். குப்பையை ஒருங்கு சேர்த்து மேலே குறிப்பிட்ட குழுவுக்கு ஒப்படைக்க வேண்டும். ஒப்படைக்கும் குப்பை கலக்கியதாகஇருந்தால் அது துணை விதிகளை மீறியதாகக் கருதப்படும். அதற்காக அபராத அட்டவணை–1 ன்படி அபராதம் விதிக்கப்படும். *மீண்டும் மீண்டும் விதிகளை மீறுதல் தொடர்ந்து அபராதம் செலுத்த வேண்டி வரும்.

5.10 பிரிக்கப்பட்ட உயிரி மக்கும் குப்பை உயிரி மக்கும் திடக்கழிவு (அட்டவணை– 3 ன்படி) குப்பை உருவாக்குவோரால்உரமாக்க வில்லை என்றால், குப்யை உருவாக்குவோர் அவ்வகைக் குப்பையைத் தங்கள் வளாகத்தில் ஒருங்கு சேர்த்துவைக்கவேண்டும். அவ்வாறான குப்பை உருவாக்குவோர் ஒவ்வொருவரும் அதனைக் கொள்கலன் பொருத்தப்பட்ட வண்டிக்குஅல்லது குறிப்பிட்ட பெருமளவு வணிகக் குப்பைஉருவாக்குபவர் உயிரி மக்கும் குப்பை பெறுவதற்காக உள்ள வாகனத்திற்கு அல்லதுதொடர்புடைய உதவி ஆணையாளர் அவ்வப்போது அறிவித்தல்படி கரூர் மாநகராட்சி நாள்தோறும் அவ்வகை கழிவைஎடுத்துச் செல்லும் ஒதுக்கப்பட்ட உயிரி மக்கும் குப்பை ஒருங்கு சேர்த்தல் மையத்திற்கு ஒப்படைத்தலுக்கும் உறுதிபடுத்த வேண்டும்.

5.11 குப்பை உருவாக்குவோர் அனைவரும் கலப்பு உரமாக்கல்: கழிவைக் கொண்டு செல்லும் போக்குவரத்துச் செலவைக்குறைக்கும் பெரு நோக்கத்தை அடையும் கருத்தோடு வட்டார அளவில் உரமாக்கலை ஊக்குவிக்க வேண்டும்.

5.12. குறிப்பிட்ட வீ ட்டு அபாயகமான கழிவு அட்டவணை 3 ன்படி) உருவாக்கும் ஒவ்வொருவரும் ஒருங்கு சேர்த்து கரூர்மாநகராட்சியால் குறித்தபடி வாரந்தோறும் வழங்கப்படும் கழிவைப்பெறும் வாகனத்தில் அல்லது தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்இவ்வாறான கழிவைப்பெற அங்கீகாரம் வழங்கிய முகமையிடம் அல்லது இவ்வாறான கழிவை உரிய வகையில் அகற்றுவதற்காகத்
தமிழ்நாடு அரசு அல்லது தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் நியமிக்கப்பட்டட மையத்தில் ஒப்படைக்க வேண்டும்.

5.13 திருத்தாத உயிரி மருத்துவக் கழிவை (அட்டாபணை –4 ன்படி) குறிப்பிட்டவகை மூடிய கொள்கலனில் அடைத்து வைத்துஇவ்வகைக் கழிவு உருப்பாக்குவோர் ஒவ்வொருவரும் வாரந்தோறும்/ அவ்வப்போது கரூர்மாநகராட்சியால் அளிக்கும் அல்லதுதமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் அதிகாரம் வழங்கிய பிற முகமை பெறுதல் வாகனத்திற்கு அல்லது இவ்வகைக் கழிவைத்தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் கட்டளை இட்டுள்ள முறையில் உயிரி மருத்துவ கழிவு மேலாண்மையும் கையாளுதலும்)

சட்டம்1998 (2000–ல் திருத்தப்பட்டுள்ளது) இதன்படி பெற்று அப்புறப்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட மையத்திற்கு ஒப்படைக்க வேண்டும்.

5.14 கட்டுமானம் மற்றும் இடித்தல் கழிவினை (C&Dகழிவுகள்) ஒருங்கு சேர்த்து தனித்தனியாக கட்டிடக் கழிவுகள் மேலாண்மைசட்டம் 2016 ன்படி ஒப்படைக்க வேண்டும்.இந்தத் துணைவிதிகள், சிறிய (C&D கழிவுகள்) கட்டுமானம் மற்றும் இடிக்கும் கழிவுஉருவாகும் இடத்திலேயே கழிவினைத் தனித்தனியாகப் பிரித்துச் சேர்த்து வைக்க வேண்டியது. குப்பை உருவாக்குவோர் (வீட்டளவில்)வகையினர் பொறுப்பு என்று குறிப்பிடுகின்றன. கழிவு உருவாக்குவோர் கரூர் மாநகராட்சி அல்லது அதன் முகமைஉதவிப்பிரிவுடன் பேச வேண்டும். பின்னர் அவர்கள் கழிவு உருவாக்குவோரிடமிருந்து பிரிக்கப்பட்ட (C&D) கழிவினை எடுக்ககுறிப்பிட்ட கட்டணம் செலுத்திய பின் வண்டி அனுப்புவார்கள். பின் கழிவினைச் செய்முறை/ நீக்கம் இடத்திற்குக் கொண்டு செல்வார்கள்.இவ்விபரங்கள் கரூர் மாநகராட்சி தொடர்புடைய மண்டல அலுவலகங்களில் உள்ளன. கீழ்ப்படியாமை கரூர் மாநகராட்சிநிர்ணயித்த தண்டம் கட்ட வேண்டி வரும்.

5.15 பிற அனைத்து உயிரி மக்காத கழிவு (உலர்) மறுசுழற்சி செய்ய தக்கவை மறுசுழற்சி செய்ய இயலாதவை ஆகியஇரண்டும் துணைவிதியில் கண்டவாறு குப்பை உருவாக்குவோர் ஒவ்வொருவரும் ஒருங்குசேர்த்து உலர் கழிவைப் பெறும் கரூர் மாகராட்சி அல்லது அதன் முகமையின் வாகனத்திடம் தொடர்புடைய **உதவி ஆணையாளர்** அவ்வப்போது இவ்வாறானகழிவைப்பெறும்அல்லது அங்கீகாரம் பெற்ற உலர் கழிவை வகைப்படுத்தும் மையங்கள் ஆகியவற்றைப்பற்றி அறிவித்தபடி குறிப்பிட்ட நேரத்தில்
குறிப்பிட்ட இடத்தில் ஒப்படைக்க வேண்டும்.

5.16 மின்னணுக் கழிவுகளைபெறுதல் : வீடு/ஸ்தாபனம்/நிறுவனம் ஆகிறவற்றில் உருவாகும் மின்னணு கழிவுப்பொருள்களைஒப்படைக்க கரூர் மாநகராட்சி பெறுதல் இடம் வழங்குகிறது. தகுந்த முகமையை ஈடுபடுத்தி அல்லது வேறுவகையில் இக்கழிவு அப்புறப்படுத்தப்படும்.

5.17: பெருமளவு தோட்டம், தோட்டக்கலைக் கழிவுகளைப் பிறவற்றுடன் சேர்க்காமல் வைத்து அவை உருவாகும் இடத்திலேயேஉரமாக்க வேண்டும் கரூர் மாநகராட்சி சுகாதாரப் பிரிவின் பொறுப்பு அதிகாரி மரக்கிளை நறுக்கித் திருத்தம் செய்தல், நறுக்கியவற்றைச் சேர்த்து வைத்தல் மற்றும் அவற்றைக் பெறுதல் அட்டவணை உட்பட ஒப்படைத்தல் ஆகிய மரம் பற்றிய அறிவுரைகள்!விதிமுறைகள் தெரிவிப்பார் உருவாகும் இடத்தில் உரமாக்க எங்கு இயலவில்லையோ கரூர் மாநகராட்சி தொடர்ந்து அவற்றைப்பெற்று தோட்டம், தோட்டக்கைக் கழிவுகளைத் தனித்தனியாகப் பிரித்து அவ்வப்போது அறிவித்திருப்பதற்கு ஏற்ப தக்க கட்டணம்விதித்து எடுத்துச்செல்ல வேண்டும்.

5.18 சமுதாயக் கழிவு சேகரிப்பு மையங்கள்: கரூர் மாநகராட்சி முகமை வாகனத்தின் மூலம் நகர எவ்வகைத்திடக்கழிவை நேராகப் பெறுதல் சமுதாயக் கழிவு சேகரிப்பு மையம் திறந்தவெளியில் அல்லது வளாகத்திற்குள் மூடியகொள்கலன்களில்அல்லது பொது

இடத்தில் அமைந்திருந்தாலும், பிரித்த கழிவுகள் தனித்தனியாக கொள்கலன்களில் போட்டு வைக்கும் வகையில்தனித்தனியாக கொள்கலன் அளிக்க வேண்டும். கழிவுகளைக் கொள்கலனுக்குள் போடவேண்டும். அதைச் சுற்றியோ பக்கத்திலோ,கொட்டக்கூடாது.

5.19 கழிவை எரித்தல் எவ்வகைத் திடக்கழிவையும் சாலை ஓரத்தில், குவித்து வைக்கும் இடத்தில் அல்லது வேறு தனியார்அல்லது பொது சொத்தில் எரித்து நீக்குதலுக்குத் தடை உள்ளது.இது தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் (TNPCB) அங்கீகாரம்வழங்கியுள்ள குறிப்பிட்ட வகைக் கழிவினை, மூடிய இடத்தில் சேர்த்து சாம்பலாக்கும் வசதி கொண்டதற்குப் பொருந்தாது.

6.0 கரூர் மாநகராட்சியின் கட்டாயப் பொறுப்புகள்

6.1 குடிசைப்பகுதிகள் மற்றும் முறைசாரா வீடுகள், வணிக வளாகங்கள், நிறுவனங்கள் மற்றும் ஏனைய குடியிருப்பு இல்லாத பகுதிகள்உள்ளிட்டவைகளிலிருந்து பிரிக்கப்பட்ட திடக் கழிவினை வீடு வீடாக சென்று சேகரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அடுக்குமாடிகட்டடங்கள், பெரிய வணிக வளாகங்கள், கடைகள், குடியிருப்பு வளாகங்களில் உள்ள நுழைவு வாயிலிலிருந்து அல்லது இன்னபிற நிர்ணயிக்கப்பட்ட இடங்களிலிருந்து சேகரிக்க வேண்டும்.

6:2 முறைசாரா கழிவு சேகரிப்பவர்கள் அல்லது கழிவு பொறுக்குபவர்களின் அமைப்புகளுக்கு அங்கீகாரம் அளிக்க ஒருஒழுங்கமைப்பை ஏற்படுத்திட வேண்டும் மற்றும் வீடுவீடாக சென்று கழிவுகளை சேகரிப்பதற்கான பங்களிப்பை ஊக்குவிப்பதற்குஅங்கீகரிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவர்கள் அல்லது கழிவு பொறுக்குபவர்களை மேம்படுத்துவதற்கும் ஒன்றிணைக்கவும் ஒருஒழுங்கமைப்பை ஏற்படுத்திட வேண்டும்.

6.3 சுயவேலை குழுக்களை அமைத்து அவர்களுக்கு அடையாள அட்டை வேண்டும்.அதன்பிறகு வீடுவீடாக சென்று கழிவுகளை சேகரிப்பது உள்ளிட்ட திடக்கழிவு மேலாண்மையினை ஒன்றிணைக்க ஊக்குவிக்க வேண்டும்.

6.4 அவ்வப்போது முறையான பயன்பாட்டு கட்டணத்தை தீர்மானித்து, அந்த கட்டணத்தை அவர்களாகவோ அல்லதுஅங்கீகரிக்கப்பட்ட முகவரமைப்பு வாயிலாக கழிவு உருவாக்குபவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளவேண்டும்.

6.5 கழிவுகளை உருவாக்குபவர்கள் நேரடியாக காகிதம், தண்ணீர் பாட்டில்கள், சாராய பாட்டில்கள், குளிர்பான கேன்கள்,அட்டை பெட்டிகள், பழத்தோல்கள், உறைகள் ஆகிய கழிவுகளை கொட்டவோ அல்லது தூக்கியெறியவோ அல்லது நீர்நிலைகள்,வடிகால்கள், பொது வெளியிடங்கள், தெருக்களில் கழிவுகளை எரிக்கவோ மற்றும் புதைக்கவோ கூடாது. இந்த விதிகளில் உள்ளநிபந்தனைக்களில் குறிப்பிட்டுள்ளவாறு தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளைகரூர்மாநகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட கழிவுசேகரிப்பவர்கள் அல்லது கழிவு பொறுக்குபவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

6.6 கழிவுகளிலிருந்து மறுசுழற்சி பொருள்களை முறைசாரா அல்லது அங்கீகரிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவர்கள்மற்றும் கழிவு பொறுக்குபவர்களுக்கு மறுகழற்சி செய்யக்கூடிய பொருட்களை பிரித்தெடுக்க போதுமான இடைவெளி கொண்ட இரண்டாம் நிலைசேமிப்பு வசதிகள் அல்லது பொருள் மீட்பு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். ஜவுளி, உலோகம், கண்ணாடி, காகிதம், பிளாஸ்டிக்,ஆகிய பிரிக்கப்பட்ட மறுசுழற்சி கழிவுகளை ஆதார இடத்திலேயே சேகரிப்பதற்கு கழிவு பொறுக்குபவர்கள் மற்றும்மறுசுழற்சியாளர்களுக்கு சுலபமான வழிவகைகள் செய்து கொடுக்க வேண்டும் . மக்கும் கழிவுகளை சேமிக்கும் தொட்டிக்கு பச்சை நிறமும், மறுசுழற்சி கழிவுகளை சேமிக்கும் தொட்டிக்கு வெள்ளை நிறமும், இன்னபிற கழிவுகளை சேமிக்கும் தொட்டிக்கு கருப்புநிறமும் அடிக்க வேண்டும்.

6.7 உள்ளூர் அபாயகரமான கழிவுகளை கொட்டுவதற்கு கழிவு படிவு மையங்களை அமைக்க வேண்டும்.மற்றும் பாதுகாப்பாகஅகற்றுவதற்காக உள்ளூர் அபாயகரமான கழிவுகளை இந்த மையங்களில் கொட்டுவதற்கு கழிவு உருவாக்குபவர்களுக்கு தக்கஅறிவுரைகள் வழங்க வேண்டும். அந்த இடங்களை நகரம் மற்றும் புறநகரங்களில் அதாவது, 20 சதுர மீட்டர்கள் அடங்கிய பகுதிக்குஒரு மையம் அல்லது பகுதியாக அமைக்க வேண்டும். அந்த மையங்களில் அபாயகரமான கழிவுகள் பெறப்படும் நேரத்தினை அறிவிக்கவேண்டும்.

6.8 கழிவு சேகரிப்பவர்கள் மற்றும் கழிவு பொறுக்குபவர்களுக்கு திடக்கழிவு மேலாண்ணம குறித்த பயிற்சி அளிக்க வேண்டும்.

6.9 தினந்தோறும் காய்கறி, பழம், பூ.இறைச்சி, கோழி மற்றும் மீன் சந்தைகளிலிருந்து கழிவுகளை சேகரிக்க வேண்டும்.சுகாதாரமான சூழ்நிலைகள் உருவாகும் வகையில் அந்த பகுதிகளில் உள்ள சந்தைகளில்மற்றும் அதன் அருகாமையில் பரவலாக்கப்பட்ட கலப்பு உர தளவாடம் அல்லது பயோ–மீத்தேன் தளவாடம் அமைக்க வேண்டும்.

6.10 உள்ளக நிலைமை மற்றும் வணிக செயல்பாடு, மக்களின் அடர்த்தியை பொறுத்து வாரத்திற்கு இரண்டு முறை அல்லதுஒரு நாள் விட்டு ஒரு நாள் அல்லது தினந்தோறும் உப–சந்துக்கள், சந்துக்கள் மற்றும்சாலைகளில் கூட்டிய கழிவுகளை தனித்தனியாகசேகரிக்க வேண்டும்.

6.11 முடிந்தவரை தோட்டக்கலை, தோட்டங்கள் மற்றும் பூங்கா கழிவுகளை தனித்தனியாக சேகரித்து, அதனை தோட்டம்மற்றும் பூங்காக்களில் செயல்முறைப்படுத்த வேண்டும்.

6.12 பிரிக்கப்பட்ட மக்கும் கழிவுகளை இருப்பு வைக்கும் இடங்களான கலப்பு உர இயந்திரகம், உயிரி–மீத்தேனாக்க இயந்திரகம் அல்லது ஏதாவது ஒரு இடத்திற்கு எடுத்துச்செல்ல வேண்டும்.இவ்வகை கழிவுகளுக்கு ஆங்காங்கே செயல்முறைப்படுத்துதலுக்குமுக்கியத்துவம் வழங்கப்படவேண்டும்.

6.13 மக்காத கழிவுகளை அந்தத்த இருப்பு வைக்கும் இடம் அல்லது பொருள் மீட்பு இடங்கள் அல்லது இரண்டாம் நிலைஇடங்களுக்கு எடுத்துச் செல்லவேண்டும்.

6.14 2016–ஆம் ஆண்டு கட்டிட மற்றும் இடிபாட்டு கழிவுகள் மேலாண்மை விதிகள் குறிப்பிட்டுள்ளவாறு கட்டட மற்றும்இடிபாட்டுக் கழிவுகளை எடுத்துச் செல்ல வேண்டும்.

6.15 இருப்பு வைக்கும் இடங்களைச் சுற்றி சுகாதார சூழ்நிலைகள் மற்றும் துர்நாற்றத்தை கட்டுப்படுத்தும் பொருட்டு கழிவினைசெய்முறைப்படுத்தவும், சாண எரிவாயு வீட்டுக்கலப்பு உரங்களை மேம்படுத்தவும் மற்றும் கழிவு மேலாண்மைக்கு சமூகங்களைஈடுபடுத்த வேண்டும்.

6.16 இரசாயண உரங்களை இரண்டாண்டுகளில் பயன்படுத்துமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.கரூர் மாநகராட்சிஅமைப்புகளால் பராமரிக்கப்படும் அனைத்து பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள், அதன் அதிகாரத்தின் கீழுள்ள ஏனைய இடங்களில்முடிந்தவரை கலப்பு உரத்தைப் பயன்படுத்திட வேண்டும். முறைசாரா கழிவு மறு சுழற்சி செய்பவர்கள், மறு சுழற்சி முன்னேற்பாடுகள்செய்வதற்கு தக்க ஊக்கத் தொகைகள் அளிக்கப்பட வேண்டும்.

6.17 மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் வரையறுத்த தரங்களுக்கேற்றவாறும், அவ்வப்போது நகர்புற வளர்ச்சி அமைச்சகம் வழங்கியுள்ள வழிகாட்டுதலின்படியும் கீழ்க்குறிப்பிட்டுள்ள நுட்பங்களையும் சேர்ந்து அவர்களாக அல்லது தனியார் துறைபங்களிப்புடன் அல்லது முகவரமைப்பு வாயியாக திடக்கழிவின் மூலம் பெறப்பட்ட பலவிதமான பொருள்களைக் குறைந்த அளவில்பயன்படுத்துவதற்கேற்றவாறு தக்க நுட்பங்களைப்பயன்படுத்தும் வகையில் திடக்கழிவு இருப்பு வைக்கும் இடங்கள் மற்றும் அதனுடன்தொடர்புடைய உட்கட்டமைப்புகளைப் பராமரிக்கவும், இயக்கவும், கட்டுமான வசதிகளுக்கு வகை செய்யப்பட வேண்டும்.கீழ்க்குறிப்பிட்டிருக்கும் சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் போக்குவரத்து செலவினைக் குறைக்கும் வகையில் ஒருங்கிணைக்கப்பட்டசெய்முறைக்கு தக்க முன்னுரிமை வழங்க வேண்டும்

அ) உயிர் மீத்தேன் ஆக்குதல், நுண்ணுயிர்க்கலப்பு உரமாக்கல், புழு கலப்பு உரமாக்கல், காற்று புகா செரிமானம் அல்லது மக்கும் கழிவுகளை உயிரி நிலைப்படுத்தலுக்கான ஏனைய யாதொரு செய்முறைப்படுத்துதல்.

ஆ) திடக் கழிவு சார்ந்த மின் உற்பத்தி நிலையங்கள் அல்லது சிமெண்ட் உலைகளுக்கு மூலப் பொருள் வழங்கவும் அல்லதுகழிவினை எரிப்பதற்கும் கழிவிலிருந்து பெறப்படும் எரிபொருள் உட்பட்ட எரிசக்திசெய்முறைப்படுத்துதல்.'

6.18 இந்த விதிகளில் வரையறுக்கப்பட்ட முறையின்படி அட்டவணை 1–இல் குறிப்பிட்டுள்ள வண்டல் கழிவுகளை அகற்ற அவர்களாக அல்லது ஏனைய யாதொரு முகவரமைப்பு வாயிலாக சுகாதார கழிவுகள் புதைக்கப்பட்ட நிலம் மற்றும் அது தொடர்புடையஉட்கட்டமையைப் பராமரிக்கவும்,இயக்கவும்மற்றும் கட்டுமானம் செய்திடவும் வேண்டும்.

6.19 ஆண்டறிக்கையில் மூலதன முதலீட்டிற்கும் திடக்கழிவு மேலாண்மை சேவைக்கும் தேவையான நிதி ஒதுக்கும் பொருட்டுவழி வகைகள் செய்ய

வேண்டும்.இந்த விதிகளுக்குட்பட்டு கரூர் மாநகராட்சி அமைப்புகளின் ஏனைய கடமையானசெயல்பாடுகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கு ஏற்றவாறு தேவையான நிதியை ஒதுக்கிய பின்னரே கரூர்மாநகராட்சிஅமைப்புகள் அதன் தன்னிச்சையான செயல்பாடுகளுக்கான நிதியை ஒதுக்க வேண்டும்.

6.20 பிரிக்கப்பட்ட கழிவுகளை வீடு வீடாக சேகரிப்பதற்கும் அகற்றல் வசதி அல்லது செய்முறைக்கு கலப்பற்ற கழிவுகளைமுதல் மற்றும் இரண்டாம் நிலை எடுத்துச் செல்வதற்கும் பணியாளர்களாகிய ஒப்பந்தத் தொழிலாளர்கள் மற்றும்மேற்பார்மையாளர்களுக்கு தகுந்த பயிற்சி அளிக்க வேண்டும்.

6.21 திடக்கழிவினை கையாளும் அனைந்து பணியாளர்களுக்கும் சொந்த பாதுகாப்பு உபகரணங்களான சீருடை, ஒளிவரும்கோட்டுகள், கையுறைகள், மழைக்கோட்டுகள், உரிய காலணிகள் மற்றும் முகமூடிகள் வழங்க வேண்டும். அவைகளை வேலை நிமித்தமாக பயன்படுத்தும் வகையில் இயக்குபவர் பாரத்துக்கொள்ளவேண்டும்.

6.22 தொடர்பாடல் பிரச்சாரம், கல்வி மற்றும் தகவல் தொடர்பு மூலமாக பொது விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும்.கழிவுஉருவாக்குபவர்களுக்கு கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு தகுந்த பயிற்சி அளிக்க வேண்டும். அதாவது

அ) குப்பை போடாதது

ஆ) கழிவு உருவாக்குவதைக் குறைப்பது

இ) முடிந்தவரை கழிவு மறுபயன்படுத்தல்

ஈ) மூலத்திலேயே கழிவு உருவாகும் இடத்திலேயே உள்ளூர்அபாயகரமான கழிவுகள் மற்றும் சுகாதார கழிவுகள், மக்கும்கழிவுகள், மக்காத (மறு சுழற்சி மற்றும் எளிதில் தீப்பற்றக்கூடிய கழிவுகள்) கழிவுகள் என பிரிப்பதற்கு பயிற்சி கொடுத்தல்,

உ) வீட்டு உரமாக்கல், மண்புழு உரத்தயாரிப்பு சாண எரிவாயு ஆக்கம் அல்லது சமூக அளவிலான உரமாக்கலுக்கு பயிற்சிகொடுத்தல்.

ஊ) கரூர்மாநகராட்சி அமைப்பு வரையுறுத்தவாறு தகுந்தவாறு பொதிந்து அல்லது வியாபாரக் குறி உரிமையாளர்கள்வழங்கிய உறைகளில் உடனுக்குடன் எடுக்கப்பட்ட பயன்படுத்திய சுகாதாரக் கழிவுகளை பாதுகாப்பாக உறையிட வோண்டும். மக்காதகழிவுகளை அதற்கான தொட்டிகளில் வைக்க வேண்டும்.

எ) கழிவு உருவாக்கும் இடத்திலேயே உள்ள பல்வேறு தொட்டிகளில் பிரிக்கப்பட்ட கழிவுகளை சேமிக்க வேண்டும்.

ஏ) பிரிக்கப்பட்ட கழிவுகளை கழிவு சேகரிப்பவர்கள் மற்றும் கழிவு பொறுக்குபவர்கள், மறுகழற்சியாளர்கள் அல்லது கழிவு சேகரிப்பு முகவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

ஐ) திடக்கழிவு மேலாண்மை நிலைத்திட கரூர் மாநகராட்சி மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட நபரிடம் அல்லது கரூர் மாநகராட்சி அமைப்பிடம் அல்லதுகழிவு சேகரிப்பவரிடம் மாதகட்டணம்அல்லதுபயன்பாட்டுக்கட்டணத்தைசெலுத்திடவேண்டும்.

6.23) அட்டவணை 1ல் உள்ள விவரக்குறிப்புகளை நிறைவுசெய்யும் வகையில் உள்ள மறு பயன்பாடு அல்லாத மக்காத, மறுசுழற்சி செய்ய முடியாத எதிர் வினையல்லாத மந்தமான கழிவுகள் மற்றும் முன் செயலாக்க நிராகரித்தல் மற்றும் கழிவு செயல்முறை வசதிகளிலிருந்து வரும் வண்டல்கள் ஆகியன மட்டுமே சுகாதார கழிவுகள்

புதைக்கப்படும் இடங்களுக்குள் அனுமதிக்கப்பட வேண்டும் என்று பூஜ்யக் கழிவு என்ற விரும்பிய நோக்கத்தை எய்துவதற்கு கழிவுகளை மறுசுழற்சி அல்லது மறுபயன்பாடு செய்ய அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும்.

## 7.0 கரூர் மாநகராட்சியின் மற்ற பொறுப்புகள்

7.1 **குடிமக்கள் ஆதார அடித்தளம்** கழிவை மறுசுழற்சி செய்ய மக்களுக்கு வசதி ஏற்படுத்தித் தரும் பொருட்டு கரூர் மாநகராட்சியால் அமர்த்தப்பட்ட அதிகாரி கரூர் மாநகராட்சி பதிவு பெற்ற உரமாக்கும் வல்லுநர், உரிமம் பெற்ற உடைசல்,வணிகர்,மறுசுழற்சிக்,கொள்கலன் வணிகர்குப்பைத் தொட்டி உருவாக்குவோர், மறு மழற்சி சிறப்புத் தன்மை கொண்ட முகமை போன்ற பட்டியலை தயாரித்து வெளியிட வேண்டும். செயல்முறை தொடர்பாகப் பயிற்சி / வழிகாட்டுதல் மற்றும் உதவி அளிக்கும் அலுவலர் பதிவு பெற்றவர்கள்/அமைப்புகள் ஆகியோரின் பெயர்களும்,தொலைபேசிக எண்களும் அளிக்க வேண்டும். இந்த விவரம் கரூர் மாநகராட்சியின் இணைய தளத்தில் www.tnurbantree.tn.gov.in/ karur / ல் கிடைக்க செய்ய வேண்டும்.

7.2 **திடக்கழிவு மேலாண்மை பணிக்காகப் பயனர் கட்டணம்** தொழில் கழிவுக் கட்டணம் அட்டவணை 4ன் படி திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கான பராமரிப்புச் செலவை ஈடுகட்டும் பொருட்டு பயனர் கட்டணம் விதிக்க வேண்டும் எனவும் கழிவு உருவாக்கும் பொதுமக்களிடமிருந்து அதைப் பெறவேண்டும். கரூர் மாநகராட்சி தங்கும் விடுதி, உணவகம், பிற கழிவு உருவாக்குவோர் ஆகியோருக்குப் பொருந்தும் தொழில் கழிவு கட்டணத்தை அதனைக் கழிவின் அளவுடன் இணைந்து, திடக்கழிவு உருவாக்குவோருக்கு ஏதாவது உரிமம் வழங்கி இருந்தால் உரிமக்கட்டணம் விதித்து ஒழுங்குபடுத்தும் இவ்வாறான தகவல்கள் மண்டல அலுவலகங்களிலும் கரூர் மாநகராட்சி இணையதளத்திலும் கிடைக்கும்.

7.3 **வட்டார உயிரி மக்கும் கழிவு** திருந்தம் செய்யும் அலகுகள், கரூர் மாநகராட்சியின் வசதி, தேவை ஆகிறவற்றிற்கு ஏற்ப சிறு அளவில் கழிவு திருத்தம் செய்யும் அலகுகளைப் பெரிய காலி இடங்களில் (பொது பூங்கா, விளையாட்டு மைதானம், பொழுதுபோக்கு மைதானம், தோட்டம், சந்தை, கரூர் மாநகராட்சி அல்லது வேறு பொது அதிகார அமைப்புகள் அல்லது அரசுதுறை இவ்வாறான அலகுகள் உருவாகக் காரணமாக இருந்து ஏற்றுக் கொள்ளும் முகமை / காவல்பொறுப்பாளர்/ ஒப்பந்தக்காரர்/பொது இடங்களின் பராமரிப்புக்குப் பொறுப்பாளரான குத்தகைதாரர் அல்லது தனிப்பட்ட சொந்தகாரர் இவ்வாறான காலி இடங்களில் குடியிருப்போர் ஏற்படுத்தும் இவை உள்ளூர் சமுதாயத்திற்குச் செய்முறை மாதிரிகளாகச் செயல்படும், இவற்றை உரிய வகையில் சுற்றுச்சூழலுக்குச் சீரழிவு ஏற்படா வகையில் பராமரிக்க வேண்டும்.

7.4 **வழிபாட்டு இடங்கள்**, இறுதிச்சடங்கு ஆகியவற்றில் உருவாகும் உயிரி மக்கும் குப்பை சிறப்புக் கொள்கலன்கள் அல்லது*சமுதாயக் கழிவு சேகரிக்கும் தொட்டிகள் –இல் அறிவித்தவாறு ஏரி, குளம், குட்டை போன்ற நீர்நிலைகள் அருகில் குறிப்பிட்ட சிலஇடங்களில் பூக்கள், இலைகள், பழங்கள் போன்ற உயிரி மக்கும் குப்யை பெறுவதற்கு ஒவ்வொரு வார்டின் உதவி ஆணையாளர் தாமே மேற்கொள்ள வேண்டும் அல்லது விருப்பமுள்ள அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கவேண்டும். இவ்வாறான

கொள்கலனில் பெற்றதொகுப்பை பொருத்தமான இடத்தில் உரமாக்க வேண்டும். கொள்கலன்கள் உரமாக்கும் அலகுகள், ஆகியன இந்நோக்கத்திற்குத்தகுந்த ஆட்களைப் பெற்றிருக்க வேண்டும்.

7.5 **குறிப்பிட்ட சிற்சில இடங்களிலிருந்து கழிவு பெறுதல் சேவை** :குப்பை உருவாக்குவோர் சேர்த்து வைத்த கழிவை கரூர் மாநகராட்சி ஏற்பாடு செய்யும் கொள்கலன் பொருத்திய வாகனங்களில் ஒப்படைக்க பொது அல்லது தனியார் சாலையின், குறிப்பிட்ட இடத்திற்குக் கொண்டுவரும் திடக்கழிவினைப் பெறுவதற்கு அமர்த்தப்பட்ட அதிகாரி ஏற்பாடு செய்வார். தொடர்புடைய உதவி ஆணையாளர்களால் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டவாறு குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடம் என்று வண்டி செல்லும் வழித்தடம் திட்டத்தின்படி சிற்சில இடங்களிலிருந்து கழிவு பெறுவதற்கும் குறிப்பிட்ட வகை குப்பைகளை வெவ்வெறு இடங்களிலிருந்து பெறுவதக்கும் கொள்கலன் பொருந்திய வாகன சேவையை கரூர் மாநகராட்சி வழங்கும்.

7.6 **உருவாகும் இடத்தில் பெறுதல்** : தொடர்புடைய உதவி ஆணையாளர் அறிவித்தபடி கரூர் மாநகராட்சி பகுதியில் வளாகத்திற்குள் திடக்கழிவு உருவாகும் இடத்தின் அல்லது கட்டடத் தொகுதியின் வளாகத்தில் வைத்துள்ள கழிவு சேர்த்து வைக்கும் கொள்கலன்களிலிருந்து கரூர்மாநகராட்சி வாகனங்கள் சுகாதார பாணியாளர் குறிப்பிட்ட நேரத்தில் சென்று எடுக்க ஏற்பாடு
செய்கிறது.

7.7 **பள்ளம்நிரப்புதலில்பெறப்பட்டகழிவுகளின்தகவல்**
:வெவ்வேறுபள்ளம்நிரப்புதலுக்குச்செல்லும்ஒவ்வொருவகைகழிவுகளின்அளவு, குறிப்பிட்டஇடைவெளிகளில்கழிவுசெயல்முறைக்குஉள்ளாகும்இடம்ஆகியனபற்றியதகவலைகரூர்மாநகராட்சிவெளிப்படையாகவெளியிடும்வெளிப்படைத்தன்மையைஉறுதிசெய்வதற்குஇவ்வகைக்குறிப்புகள்மண்டலஅலுவலகங்களிலும்கரூர்மாநகராட்சிஇணையதளத்திலும்கிடைக்கும்.

7.8 **பொது இடத்தில் சமுதாயக்கழிவு ஒருங்கு சேர்ப்பு மையம்** : விதி விலக்கான நிகழ்வுகளில் எங்குக் குறிப்பிட்ட இடங்களில் அல்லது குப்பை உருவாகும் இடத்தில் பெறுதல் இயலாமையாக உள்ளதோ அல்லது தற்போதைக்கு தொடங்கப்பட்டததாக இருக்கிறதோ, கரூர் மாநரகாட்சி பொதுச்சாலையில் அல்லது பொது இடங்களில் எங்குத் தேவையோ எங்கு முடியுமோ அங்கு உதவி ஆணையாளர் தீர்மானித்தவாறு அல்லது ஒரு முகமையின் மூலம் குப்பை உருவாகும் இடத்திலேயே அல்லது குறிப்பிட்ட இடத்தில் தேவையான இடைவெளிகளில் கொள்கலன் பொருத்திய வண்டியில் பெறுதல் இயலுவது ஆகும் வரை சமுதாயகழிவுச் சேகரிப்பு மையங்களை ஏற்படுத்தி பராமரிக்கும் தொடர்புடைய கழிவு உருவாக்குவோர் பிரிக்கப்பட்ட கழிவுகளைச் சமுதாய கழிவுச் சேகரிப்பு மையத்தில் ஒப்படைக்க வேண்டும். அங்கிருடந்து கரூர் மாநகராட்சி எடுத்து செல்லும் இச்சமுதாய கழிவுச்சேகரிப்பு மையத்தில் கரூர் மாநகராட்சி அல்லது பிரித்தல் பொதுத் தொல்லை தவிர்ப்பு, உடல் நலக்கேடு ஆகியவற்றில் இணக்கத்தை உறுதிபடுத்தும் அதன் முகமைகளின் ஆட்கள் அமர்த்தப்பட்டிருப்பர். ஒவ்வொரு சமுதாயகழிவு சேகரிப்பு மையத்திலும் உயிர்மக்கும் குப்பை, உயிரி மக்காதகுப்பை ஆகியவற்றிற்காக குறைந்தது இரண்டு தனித்தனியாக கொள்கலன்கள் பெறுதல் அட்டவணை ஆகியவைப்பற்றிய விவரங்கள்மண்டல அலுவலகங்களிலும் கரூர்

மாநகராட்சி இணையதளத்திலும் கிடைக்கும். தொடர்புடைய மண்டல அலுவலக உதவி ஆணையாளர் இந்த சமுதாயகுப்பைத் தொட்டி நிரம்பிவழியாதவாறும் குப்பை பெறுக்குவோர், தெருவிலங்குகளால் சிதறி தெறிக்காதவாரும் இருக்கப்பார்த்துக் கொள்ளவேண்டும்.

7.9 அனைத்து 12 வாழிடங்களுக்கு மேலுள்ள அடுக்குமாடிகள் ஒரு பொது இடத்தில் தனியாக குப்பை சேகரிப்பு கொட்டாரம் / வசதிதங்கள் வாளகங்களுக்குள் கொண்டிருக்க வேண்டும். அவர்களால் ஏற்படுத்தும் கழிவினை, இந்தத்துணைவிதிகள் வேறெங்கோகுறிப்பிட்டுள்ளவாறு பிரித்த நிலையில் சேர்த்துவைக்க வேண்டியது அந்தக்கட்டத்து (RWA) தங்கியிருப்போர்/ உரிமையாளர்இனபெறுப்பாகும். இந்தக் கழிவினைப் பிரித்த நிலையில் அந்த இடத்திலிருந்து சுகாதாரப்பணியாளர் / முகமை பெறுவார்.

7.10 உலர்க் கழிவுவகைப்படுத்தும் மையம் மறுசுழற்ச்சி செய்யத்தக்க, மறுசுழற்சி செய்ய இயலாதகழிவுகள் வகைப்படுத்து தலை ஒழுங்கு படுத்துதலை எளிதாகவும் தொடர்புடைய உதவி ஆணையாளர் தேவையான இயன்ற அளவுவகைப்படுத் தல்மையங்களை உருவாக்கித்தருவார். அங்கு உலர்க்கழிவுகளைப் பெறுதலும் வகைப்படுத்துதலும் நடைபெறும். இந்த வகைப்படுத்துதல் மையங்கள் கரூர் மாநகராட்சிநிலத்தில் அல்லது அரசு நிலத்தில் அல்லது பிற இடத்தில் திறந்த கூடாரமாக இருக்கும். இவை குப்பை பொறுக்குவோர் / உரிமம் பெற்ற மறுசுழற்ச்சியாளர் பதிவு பெற்ற கூட்டுறவு சங்கம் அல்லது கரூர் மாநகராட்சி அதிகாரம் வழங்கிய / அமர்த்தப்பட்ட முகமையால் ஆள் அமர்த்தப்பட்டதாக / இயக்குவதாக இருக்கும். வகைப்படுத்தியபின்இருக்கும்மறு சுழற்சி செய்ய இயலாத கழிவை இவ்வகை வகைப்படுத்தும் மையத்திலிருந்து அவ்வபோது கழிவு மாற்றும் நிலையத்திற்கும் அங்கிருந்து திருத்தம் செய்யும் அல்லது அகற்றும் வசதி இடத்திற்கும் கொண்டு செல்ல வேண்டும். இவ்வகை உலர்கழிவு வகைப்படுத்தும் மையத்தில் வெவ்வேறு வகைக்கழிவுகளை அறிவிக்கப்பட்டவிலையில் வாங்குவதற்கும் விற்பதற்கும் வசதி இருப்பதைப் பற்றிக் கருதிப் பார்க்கலாம். இது உதவி ஆணையாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்டதாக இருக்கவேண்டும். இவ்வாறான மையங்கள் கழிவு அவ்வழியில் செல்வோர் கண்ணுக்குப்படாத வகையில் வேலி அமைக்கப்பட்டனவாக / மறைப்பு செய்யப்பட்டனவாக, இருக்கவேண்டும்.

7.11 நேர அட்டவணையும் பெறுதல் செல்வழியும்

i) உயிரி – மக்கும்கழிவு,

ii) மறு சுழற்சி செய்யத்தக் ககழிவு மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவு

iii)வீட்டு அபாயகரமான கழிவு என்பன போன்ற பல்வேறுவகை கழிவுகளை நாள்தோறும் மற்றும் வாரந்தோறும் பெறும் நேரம் மற்றும் செல்வழிகள் ஆகியவற்றை உறுதிசெய்து அவற்றை முன் கூட்டி யேதங்கள் மண்டல அலுவலகம் ஒவ்வொன்றிலும் தொடப்புடைய உதவி ஆணையாளர்கள் தெரியப்படுத்த வேண்டும். கழிவுகளைப் பெறுதலில் நேர அட்டவணை செல்வழி ஆகியவற்றில் ஏதாவது மாற்றம் இருந்தால் தொடர்புடைய உதவி ஆணையாளர்கள் வார்டு அலுவலகம் ஒவ்வொன்றிலும் தெரியப்படுத்த வேண்டும். இந்தவிவரம் அனைத்து மண்டல அலுவலகங்களிலும் கரூர் மாநராட்சி இணையதளத்திலும் தெரியப்படுத்தவேண்டும். இதைபோல வேகரூர்மாநகராட்சி அல்லது

அதன் அதிகாரம் பெற்ற முகமைகள் கட்டுமானம் மற்றும் இடித்தல் கழிவு உருவாக்கு வோருக்கும் நியமிக்கப்பட்ட தொடர்புடைய பொறுப்பு அலுவலர் அல்லது தொடர்வுடைய உதவி ஆணையாளரால் தெரியப்படுத்த வேண்டும்.

7.12 எதிர்பாரா ஆய்வு – ஆணையாளர், துணை ஆணையாளர், உதவி ஆணையாளர் அல்லது ஆணையாளரால் நியமனம் செய்தவேறு அதிகாரி இணக்கம் ஏற்படுவதை ஊக்குவதற்காக மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பல்வேறுவார்டுகளில் எந்நேரத்திலும் (இரவு அல்லது பகல்) எதிர்பாரா ஆய்வு மேற்கொள்வார். விதி மீறுதல் இருந்தால் தண்டம் கட்டவேண்டி இருக்கும். இந்த ஆய்வுகளில் குப்பை ஏதாவது இருப்பதைக் கண்டறிந்தால் அதை கரூர் மாநகராட்சி அகற்ற வேண்டும்.

7.13 ஒவ்வொருவார்டிலும்நடைமுறைப்படுத்தும்குழு– திடக்கழிவுகள்மேலாண்மைசேவைக்காககரூர்மாநகராட்சிதொல்லைகண்டறிபவரைஅமர்த்தவேண்டும்.நடைமுறைப்படுத்தும்குழுஉருவாக்கவேண்டும்.அமர்த்தப்பட்டஅதிகாரிதொல்லைகண்டறிபவர், நடைமுறைப்படுத்தும்குழுஆகியவற்றைமேற்பார்வைசெய்வார்.

7.14 விளம்பரம், மக்கள் தகவல் மையம் – கரூர் மாநகராட்சி துணைவிதிகள் கருத்துக்களை சைகை, விளம்பரம், துண்டு அறிக்கை, வானொலி தொலைகாட்சி ஆகியவற்றில் அறிவிப்பு இதழ்களில் கட்டுரை மற்றும் பிற தக்கவழி முறையில் ஊடகம் வழி பரப்பலாம். அதனால் பொதுமக்கள் அனைவருக்கும் சட்டக்கடமைகள் மற்றும் கரூர் மாநகராட்சியின் மறுசுழற்சி கழிவு மற்றும் குப்பை சேர்வதற்கு எதிராக சேவைகள் மற்றும் அபராதம் பற்றி அறிந்து கொள்ளவாய்ப்பு கிடைக்கும்.

7.15 அமர்த்தப்பட்ட அதிகாரிகளும் கால இடைவெளிகளில் அறிக்கைளும் இந்தத்துணைவிதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு நுண்ணளவுத்திட்டம் மற்றும் நேர அட்டவணையின்படி நிதி ஆண்டில் நடைமுறைப்படுத்த கரூர் மாநகராட்சியின் கட்டாயப்பொறுப்புகளை நடை முறைப்படுத்தும் தொல்லைகண்டறிபவர்கள் அல்லது சுகாதார ஆய்வாளர்கள் பணியைக்கவனிப்பதற்காக ஆணையாளர் ஒரு உயர் அதிகாரியை நியமிக்கலாம். இந்தத் திட்டவட்டமான திட்டங்கள் மற்றும் நேர அட்டவணைகள் மற்றும் சாதனைகள் அவற்றிற்கு எதிராகப்பற்றாக்குறைக்கான காரணங்கள் ஏதாவது இருந்தால் அதுவும் நியமிக்கப்பட்ட அதிகாரியால் கரூர் மாநரகாட்சியின் இணையதளம் வழியாக வெளிப்படையாகப்பகிர்ந்து கொள்ளவேண்டும்.

7.16 வெளிப்படைத்தன்மையும் பொது அணுகுமுறையும் – கரூர் மாநகராட்சியின் பெருமளவு வெளிப்படைத்தன்மைக்கும் பொது அணுகு முறைக்கும் உறுதி செய்யும்பொருட்டு, கரூர் மாநரகாட்சிக்கு தேவையான அனைத்துத் தகவல்களையிம் பரப்பவேண்டியது தேவை, அது கரூர் மாநரகாட்சியின் இணையதளத்தில்www.karur.gov.in ல்காட்சிக்குவைக்கவேண்டும்.

7.17 அரசுஅமைப்புகளுடன்ஒருங்கிணைப்பு– கரூர்மாநகராட்சிபிறஅரசுமுகமைகளுடனும்அதிகாரஅமைப்புகளுடனும்ஒருங்கிணைந்து தங்கள்அதிகாரித்தின்கீழ்உள்ளபகுதியில்அல்லதுஅவ்வகைஅமைப்புகள்கட்டுப்பாட்டில் ,இயங்கும்பகுதியில்இந்தத்துணைவிதிகளைஇணக்கமாகஉறுதிப்படுத்தவேண்டும்.

.

8.0 கரூர் மாநராட்சியின் கட்டாயப் பொறுப்புகள் மற்றும் கழிவுகளை உருவாக்குவோரின் சிலகுறிப்பிட்டவகைகள்/ சூழல்கள்.

8.1 திடக்கழிவு மேலாண்மைக்காக உதவி ஆணையாளர்கள் சேரிதத்தெடுத்தல் திட்டத்தைத்தாங்கள் மண்டலங்களுக்குட்பட்ட இதுவரை கொண்டு செல்லாத பகுதிகளுக்கு எங்கெல்லாம் தகுதிவாய்ந்த சமுதாய அடிப்படையிலான அமைப்புகள் (CBOs) / அரசுசாரா அமைப்புகள் (NGOs) / தன்னார்வ தொண்டு அமைப்புகள் (VSOs) முன்னுக்கு வருகின்றனவோ அங்குநீட்டிக்க வேண்டும். CBO கள்/ NGOகள்/. VSO கள் அடையாளம் காண்பதற்கு வாய்ப்பில்லை என்றால் மாவட்ட ஆட்சியாளர் அங்கீகாரம் அளித்த சுய உதவிக்கு ழுவை உட்படுத்த ஏற்பாடு செய்யவேண்டும்.

8.2 எங்குப் பொருந்துகிறதோ அங்கு கரூர் மாநகராட்சியின் கொள்கலன் பொருந்திய வண்டி வசதிகுறிப்பிட்ட நேரங்களில் சேரிக்கு வெளியேபிரிக்கப்பட்ட குப்பையைப் பெறுவதற்கு அளிக்கப்படும்.

8.3 விதி விலக்கான நிகழ்வுகளில் கொள்கலன் பொருத்தப்பட்ட வண்டி சேவை தேவையான இடைவெளிகளில் பொதுசாலையில் குறிப்பிட்ட இடத்தில் அல்லது தற்போதைக்குப்பிற பொது இடத்தில் வழங்கும் வரை கரூர் மாநகராட்சியால் ஆள்பராமரிக்கும் சமுதாயகுப்பைதொட்டி கையாளப்படும்கழிவு ஏற்படுத்துவோர் அங்குபிரிக்கப்பட்ட கழிவுகளைப் போட வேண்டும். பராமரிக்கும் சமுதாயகுப்பைத் தொட்டிகையாளப்படும் கழிவு ஏற்படுத்துவோர் அங்கு பிரிக்கப்பட்ட கழிவுகளைப்போட வேண்டும். அங்கிருந்து கரூர் மாநகராட்சி அவ்வகைக் கழிவுகளை எடுத்து செல்லும் சேரி தத்தெடுத்தல் திட்டத்தில் பங்கேற்கும் CBO கள்/ NGO கள் / VSO கள் அவ்வகைச் சமுதாய கழிவு ஒருங்கு சேர்ப்பு மையங்களைப் பராமரித்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

8.4 கரூர் மாநகராட்சியால் தூய்மையைத் தூண்டுவது வார்டு உறுப்பினர்கள், மக்கள் அமைப்புக்ள, அரசுக்கு ழுமம், பெருநிறுவனங்கள் அவ்வப்போது சேரிப்பகுதித் தூய்மைக்கும் CBOகள் உடன் சேர்த்து சேரிதத் தெடுத்தல் திட்டத்தில் பங்கேற்கும் NGOகள் ஆகியனவற்றுடன் சேர்ந்து நடத்தப்படும்.

.

9.0 வளர்ப்புப் பறவை, மீன் இறைச்சிக்கொட்டில் கழிவு (நியமிக்கப்பட்ட இறைச்சிக் கொட்டில், சந்தைகள் தவிர்த்து மற்ற எல்லா பகுதியிலிருந்தும்)

9.1 நியமிக்கப்பட்ட இறைச்சிக் கொட்டில்களும் சந்தைகளும் தவிர வணிகச் செயல்பாடுகள் விளைவாக வளர்ப்புபறவை, மீன், இறைச்சி கொட்டில் கழிவுகள் ஏற்படுத்தும் வளாகங்களின் உரிமையாளர் / தங்கியிருப்போர் கழிவுகளை தனித்தனியாக மூடிய வகையில் சுகாதார தன்மையுடன் சேர்த்து, நாள்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் அளிக்கப்பட்டுள்ள கரூர் மாநகராட்சியின் பெறுதல் வாகனத்தில் ஒப்படைக்கவேண்டும். இவ்வகை கழிவுகளை சமுதாய கழிவுத்தொட்டியில் கொட்ட தடையுள்ளது. இது அபராத அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு தண்டம் செலுத்த வேண்டிவரும்.

9.2 இவ்வகை சந்தையை மிக உயர்ந்த அளவு உடல் தூய்மை அளிக்கும் வகையில் புதிய வகையில் அமைக்க வேண்டியது கரூர் மாநகராட்சியின் பொறியியல் பிரிவு பொறுப்பாகும்

10.0 விற்பனையாளர் / கூவி விற்போர்

விற்பனையாளர் / கூவி விற்போர் அனைவரும் தங்கள் விற்பனை செயல்பாடுகளால், கழிவு ஏதாவது உறுவானால், உயிரி மக்கும் மற்றும் பிற கழிவுகளை ஒன்று சேர்க்காமல் போட கொள்கலன் அல்லது தொட்டியை விற்பனை செய்யும் இடத்தில் வைக்க வேண்டும். கழிவுகளை சரியாக பிரித்து, கொள்கலன் பொறுந்திய கைவண்டியில் அல்லது அருகிலுள்ள சமுக கழிவு சேகரிப்பு தொட்டியில் ஒப்படைக்க வேண்டிய கழிவு உருவாக்குவோர் / விற்பனையாளர் பொறுப்பாகும். இவ்வாறு செய்ய வில்லை என்றால் அபராத அட்டவணையின் படி தண்டம் கட்ட வேண்டி இருக்கும். விற்பனையாளர் / கூவி விற்போர் தங்களை சுற்றியுள்ள பகுதியை தூய்மையாக வைக்க வேண்டியது தங்களது பொறுப்பாகும்.

11.0 வீட்டு நீர்க்கால்

11.1 உரிமையாளர் / தங்கியிருப்போர் தன்/தம் வளாகங்களின் வீட்டு நீர்க்காலில் கழிவு ஏதும் குவிக்கப்படாமலிருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டியதும், குப்பையை பிரித்து கரூர் மாநகராட்சி முகமையால் அளிக்கப்படும் கழிவு சேகரிக்கும் வாகனத்தில் ஒப்படைப்பதும் தங்கள் பொறுப்பாகும். இவ்வாறு செய்ய தவறுவது அபராத அட்டவணைப்படி தண்டம் கட்ட வேண்டி வரும்.

11.2 வளாகத்தின் உரிமையார் / தங்கியிருப்போர் வீட்டு நீர்க்கால்வாய் தூய்மைப்படுத்த கரூர் மாநகராட்சியின் சேவையை பயன்கொள்ள விரும்பினால், அவர்கள் தொடர்புடைய கரூர் மாநகராட்சியின் மண்டல அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அவ்வப்போது கரூர் மாநகராட்சி அறிவித்துள்ளபடி கழிவை அகற்றும் கட்டணத்தை செலுத்த வேண்டும். வீட்டு நீர்க்காலுக்கு செல்வதற்குரிய வழி உருவாக்கி தருவது உரிமையாளரின் / தங்கியிருப்போரின் பொறுப்பாகும்.

12.0 சொந்த / செல்ல விலங்கால் ஏற்படும் குப்பைதெருவில் அல்லது பொது இடங்களில் செல்ல விலங்கால் ஏற்படும் கழிவை வழித்தெடுத்தல் /தூய்மையாக்கல் உரிமையாளரின் பொறுப்பு ஆகும். இவ்வகைக் கழிவைத் சரியாக அப்புறப்படுத்த தங்கள் சொந்த கழிவு நீர் அமைப்பால் போதுமான அளவு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு செய்ய தவறினால் அபராத அட்டவணைப்படி தண்டம் கட்ட வேண்டி வரும்.

13.0 பொதுக்கூட்டங்களும் நிகழ்ச்சிகளும்–

13.1 எந்தக் காரணத்திற்கானாலும் ஊர்வலம், கண்காட்சி, வட்டக்காட்சி (Circus) பொருட்காட்சி, அரசியல் பேரணி, வணிகம், சமயம், சமூகம் – பண்பாட்டு நிகழ்ச்சி, கண்டனப் பேரணி, ஆர்ப்பாட்டம் முதலியன) பொது இடத்தில் நிகழ்த்தும் பொதுக் கூட்டங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் காவல்துறை மற்றும் / அல்லது கரூர்மாநகராட்சியிலிருந்து அனுமதி தேவை. அந்தப்பகுதியுடன் அதை ஒட்டிய பகுதியின் தூய்மைக்கும் உறுதி செய்வது நிகழ்ச்சி அல்லது கூட்ட அமைப்பாளரின் பொறுப்பு ஆகும்.

13.2 கரூர் மாநகராட்சி அறிவித்தபடி திரும்பிப் பெறத்தக்க தூய்மை வைப்புத் தொகையை அமைப்பாளர் / விண்ணப்பதாரிடமிருந்து தொடர்புடையமண்டல அலுவகம் நிகழ்ச்சிக் காலத்திற்காகப் பெற வேண்டும். இந்த வைப்புத் தெகையை நிகழ்ச்சி முடிந்தவுடன் குறிப்பிட்ட அந்தப் பொதுப்பகுதி தூய்மையான நிலைக்குத் திரும்பி உள்ளது என்பதையும் நிகழ்ச்சியால் ஏற்பட்டுள்ள கழிவுகள் எதாவது இருந்தால் அவற்றை ஒருங்கு சேர்த்து அதற்குரிய இடத்திற்குக் கொண்டு சென்றுள்ளதையும் பார்த்தபின் திருப்பிக் கொடுக்க வேண்டும். (இந்த வைப்புத் தொகை பொது இடத்தின் தூய்மைக்கானது மட்டுமே சொத்துக்கு சேதம் ஏற்பட்டிருந்தால், அதை சரி செய்வதற்குரிய செலவுத் தொகை அல்ல) நிகழ்ச்சியால் ஏற்படும் கழிவைத் தூய்மைப் படுத்துவதற்கு, ஒருங்கு சேர்ப்பதற்கு, கொண்டு செல்வதற்கு கரூர் மாநகராட்சியின் சேவையை நிகழ்ச்சி அமைப்பாளர்கள் பயன்படுத்தவிரும்பினால்அவர்கள்தொடர்புடையமாநகராட்சியின்உதவிஆணையாளருக் குவிண்ணப்பிக்கவேண்டும்.இதற்காகமாமன்றம்நிர்னயத்துள்ளதேவையானகட்டணத்தை செலுத்தவேண்டும்.

14.0 தனியார் சொத்தில் உள்ள கொள்கலன் தனியார் சொத்தின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது தங்கியிருப்போரும் அவரது / அவர்களது வளாகத்திற்குள் சொந்தகுப்பைத்தொட்டிவைக்க வேண்டும். அவ்வாறு வைக்கும் தொட்டி உரியவாறு மூடி இருக்க வேண்டும்.

15.0 தெருச்சாலையில் சீருந்து (Car) நிறுத்துவதில் தொல்லை

தனியார் சீருந்து பிறவாகனங்கள் பொதுத்தெருவில் அல்லது சாலையின் இரவு முழுவதும் நிறுத்திவைத்தால் அல்லது பொது வணிகப்பகுதியில் பகல் நேரத்தில் நிறுத்திவைத்தால் வாகனத்திற்கு அடியிலுள்ள சாலையைப்பெருக்க இயலாது. அவ்வாறான சாலையைப்பெருக்க இயலாத இடங்களைத் தூய்மைப்படுத்துவது சீருந்து / பிறவாகனங்கள் உரிமையாளர் பொறுப்பு ஆகும். அல்லது அட்டவணை–1ல் குறிப்பிட்டவாறு அபராதம் செலுத்த வேண்டும்.

16.0 பிறபொதுஇடங்கள்பொதுவளாகங்களின்உரிமையுள்ளவர்/ தங்கியிருப்போரானஅரசு/ அரசுநிறுவனம், சட்டபூர்வ அமைப்புகள் இந்தத் துணை விதிகளைத் தங்கள் வளாகங்களில் உரியமுறையில் நடைமுறைப்படுத்த பொறுப்புள்ளவர் ஆவர். அவர்கள் மாமன்றம் நிர்ணயிக்கும் தேவையான சேவைக்கட்டணத்தை கரூர் மாநகராட்சிக்கு கட்ட வேண்டும்.

17.0 இந்தத்துணைவிதிகளைமீறினால்செலுத்தும்தண்டம்

17.1 இந்தத் துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்குப் பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கைக் காலம் 90 நாள்கள் உண்டு. அதற்கு பிறகு இந்தத்துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணை–1 படி இந்தத்துணை விதிமீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராதத் தொகையுடன் தண்டிக்கப்படுவார். கழிவு உருவாக்குபவர் இந்தத் துணை விதிகள் ஏதாவது ஒன்றை மீறுவதாக கண்டால் அடுத்த முறை தண்டத் தொகை இரட்டிப்பாகும்.

17.2 துணை விதிகள் மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசுப்படுத்துபவர் அட்டவணை–1ல் குறிப்பிட்டுள்ள படி தண்டத்தொகை கட்ட இயலவில்லை என்றால் அவன் / அவள்–க்கு எதிராக நகரக் காவல்சட்டம் மற்றும் மாவட்டகாவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் படி வழக்கு தொடரப்படும்.

18.0 தண்டனை

துணை விதிகளில் குறித்துள்ள விதிகளை மீறுபவர் அல்லது துணை விதிகளில் குறித்துள்ள விதிகளை மீறும் 9 வயதுக்குட்பட்ட குழந்தைக்குப் பாதுகாவலனாக இருப்போர் நடைமுறையில் உள்ள சட்டத்தின் அடிப்படையில் தண்டனைக்கு உரியவர் எனக் கருதப்படுகின்றனர்.

19.0 மேல்முறையீட்டிற்கு உரிமை

கரூர்மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணைவிதிகள், 2016ல் இடர் உற்று அல்லது பாதிப்படைந்தயாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமை உள்ளவர்களாவர். இந்தத் துணை விதிகள் கரூர் மாநகராட்சி மாமன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்றபின் நடைமுறைக்கு வந்துள்ளன.

**அட்டவணை – 1**

**அபராதப்பட்டியல்**

| **வ. எண்.** | **துணைவிதிகள்** | **உட்பிரிவும்/ துணைவிதிகள்விளக்கமும்** | **சட்டத்தைமீறினால்செலுத்த வேண்டிய தண்டத்தொகை** |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **துணைவிதிஎண்.4.0குப்பைகொட்டுவதற்கும்தொல்லைஏற்படுத்துவதற்கும்தடையும்தூய்மைப்பகுதிக்குஉறுதியும்** | | | |
| 1 | 4.1 முதல் 4.4 வரை | பொதுஇடத்தில் /தனியார் சொந்மான இடத்தில் /வண்டியிலிருந்து குப்பைகளைஎறிதல், | ரூ.50/– |
| | | கடைகளிலிருந்து/வணிகநிறுவனங்களிலிருந்துகுப்பைகளை எறிதல். | ரூ.100/– |
| 2 | 4.5 பொதுத்தொல் லைஉருவாக்கல் | துப்புதல் | ரூ.50/– |
| 3 | | குளித்தல் | ரூ. 50/– |
| 4 | | சிறுநீர்கழித்தல் | ரூ. 50/– |
| 5 | | திறந்தவெளியில்மலம்கழித்தல் | ரூ. 50/– |
| 6 | | பொதுஇடத்தில்விலங்கு / பறவைக்குத்தீனிகொடுத்தல் | ரூ.200/– |
| 7 | | **வாகனங்கள்கழுவுதல்**<br>i) இருசக்கரம்<br>ii) இலகு ரக வாகனம் (LMV) (சீருந்து, ஜீப்பு, வேன் முதலியன)<br>iii) கனரக வாகனம் (HMW) (சரக்குந்து, பேருந்து, | ரூ.50/–<br>ரூ.100/–<br>ரூ.500/– |
| 8 | | சமையல் பாத்திரம் கழுவுதல் / துணி துவைத்தல் / வேறு பொருள் கழுவுதல் | ரூ.100/– |
| 9 | 4.6 தூய்மைப்பகுதிக் கு உறுதி தருவது | உரிமையாளர் / தங்கியிருப்போர் ஒரு வளாகத்திற்கு | ரூ.500/– |
| **துணை விதி எண்.5.0ணை: கழிவு உருவாக்குபவரின் கடமைகள்** | | | |
| 10 | 5.1 முதல் 5.6 மற்றும் 5.9 & 5.10 | திடக்கழிவுகளை உரிய முறைப்படி பிரித்து வழங்காமை<br>அ) குடியிருப்பு<br>ஆ) அடுக்குமாடி குடியிருப்பு | ரூ.50/– |

| வ. எண். | துணைவிதிகள் | உட்பிரிவும்/ துணைவிதிகள்விளக்கமும் | சட்டத்தைமீறினால்செலுத்த வேண்டிய தண்டத்தொகை |
|---|---|---|---|
| | | இ) பெருமளவு குப்பை உருவாக்குபவர் | ரூ.100/-<br>ரூ.500/- |
| 11 | 5.7 மற்றும் 5.8 | வளாகத்திலேயே உரமாக்கல் (அ) உயிரி எரிவாயுவாக்கல் செய்ய தேவையான வசதிகள் இல்லாத<br>அ) பெருமளவு குப்பை உருவாக்குபவர்கள் (தினசரி 100 கிலோவிற்கு மேல்)<br>ஆ) 5000 சதுர மீட்டர் அளவிற்கு மேல் உள்ள நிறுவனங்கள் | ரூ.1000/-<br>ரூ.2000/- |
| 12 | 5.12 | குறிப்பிட்ட அபாயகரமான திடக்கழிவுக் குறிப்பிட்ட வகையில் பிரிக்காமல் ஒப்படைத்தல்<br>அ) குடியிருப்புகள்<br>ஆ) அடுக்குமாடி குடியிருப்பு<br>இ) பெருமளவு குப்பை உருவாக்குபவர் | ரூ.50/-<br>ரூ.100/-<br>ரூ.500/- |
| 13 | 5.13 | மருத்துவக்கழிவுகளை மாநகராட்சி திடக்கழிவுகளுடன் சேர்த்து ஒப்படைத்தல் | ரூ.2000/- |
| 14 | 5.14 | கட்டுமானம் கழிவுகள் மற்றும் கட்டிட இடிபாடுகளை உரிய வகையில் ஒப்படைக்காமை | ரூ.1000/- |
| 15 | 5.15 | உலர் கழிவைக் குறிப்பிட்ட வகையில் பிரிக்காமல் ஒப்படைத்தல் | ரூ.100/- |
| 16 | 5.17 | தோட்டக்கழிவை, மரக்கழிவை குறிப்பிட்ட வகையில் இல்லாமல் ஒப்படைத்தல் | ரூ.200/- |
| 17 | 5.18 | சமூகக் குப்பை ஒருங்குசேர்த்தல் தொட்டிக்கு வெளியே அல்லது ஒதுக்கப்படாத பகுதியில் குப்பைக் கொட்டுதல் | ரூ.1000/- |
| 18 | 5.19 | கழிவை எரித்தல்<br>அ) தனியாள் தன் வளாகத்திற்கு உள்<br>ஆ) தனியாள் பொது இடத்தில்<br>இ) நிறுவனங்கள், வணிக நிறுவனம் | ரூ.100/-<br>ரூ.200/-<br>ரூ.500/- |
| 19 | 9.0 | மீன் வளர்ப்புப் பறவை, இறைச்சி ஆகியவற்றின் கழிவை (வீட்டில் உருவானது அல்லாத்து ) குறிப்பிட்ட வகையில் பிரித்து ஒருங்குசேர்த்தல் சேர்த்தல் செய்யாமல் ஒப்மைடத்தல் | ரூ.500/- |
| 20 | 10.0 | அ) கொள்கலம் / குப்பைக்கூடை இல்லாத<br>i) விற்பனையாளர்க்கு<br>ii) கூவி விற்பவர் சாலையோர வியாபாரிக்கு<br>ஆ)குறிப்பிட்ட வகையில் கழிவைப் பிரிக்காமல் ஒப்படைக்கம்<br>i) விற்பனையாளர்க்கு<br>ii) கூலி விற்பவர்க்கு | ரூ.500/-<br>ரூ.100/-<br>ரூ.500/-<br>ரூ.100/- |
| 21 | 11.1 | வீட்டு வாறுகாலை துய்மையாக வைக்காததற்கு | ரூ.500/- |
| 22 | 11.2 | தோல் நிறவனங்கள், கால்நடை வளர்ப்பு கூடங்கள் மற்றும் இதர வணிக நிறுவனங்களிலிருந்து வெளியேறும் கழிவு நீரை, (Screening / Diapharm Chamber) சுத்தம் செய்யாமல் பொது கால்வாய் / பாதாள சாக்கடையில் வெளியேற்றுவது | ரூ.1000/- |

| வ. எண். | துணைவிதிகள் | உட்பிரிவும்/ துணைவிதிகள்விளக்கமும் | சட்டத்தைமீறினால்செலுத்த வேண்டிய தண்டத்தொகை |
|---|---|---|---|
| 23 | 12.80 | பொது இடங்களில் செல்ல பிரானிகளால் அசுத்தம் செய்தல் | ரூ.100/- |
| 24 | 13.0 | பொதுக் கூட்டம்/ நிகழ்ச்சிக்குப்பின் தூய்மை வைப்புத் தொகை 24 மணி நேரத்திற்குள் பறிமுதல் ஆவதுடன் அபராதம் தூய்மை படுத்தாமல் இருப்பதற்கு. | ரூ.2000/- |
| 25 | 15.0 | பெருக்கும்போது சாலையில் பேருந்து / வாகனம் நிறுத்துவதனால் ஏற்படும் தூய்மையற்ற சூழ்லுக்காக | ரூ.500/- நாளொன்றுக்கு |

## அட்டவணை – 2

## மக்கும் கழிவுகள் மற்றும் மறுசுழற்சி கழிவுகள் விளக்க பட்டியல்

### உயிரிமக்கும் பழிவு

மக்கும் கழிவு என்பதன் பொருள் பொதுவாக திடக்கழிவுகளில் காணப்படும் கழிவாகும்.இது ஈரக் கழிவு எனவும் அழைக்கப்படுகின்றது. மக்கும் கழிவு முழுமையாகத் தாவரம் அல்லது விலங்கு மூலங்களிலிருந்து உருவாகும் ஒரு வகைக் கழிவு ஆகும்.

- இலைகள், முட்டை ஓடுகள், பழம், காய்கறித் தோல்கள் மற்றும் பயன்பாடாது என விடுபவை உள்ளிட்ட சமையலறைக் கழிவுகள்
- இறைச்சி மற்றும் எலும்புகள்
- மலர்கள் உட்பட தோட்டக்குப்பை மற்றும் இலைக் குப்பை
- விலங்குப் குப்பை
- பழுதடைந்த காகிதம்
- தேங்காய் ஓடு
- சாம்பல்

மறுசுழற்சி செய்யத்தக்க கழிவு என்பது பொதுவாக திடக்கழிவுகளில் காணப்படுவதாகும். இது உலர் கழிவு எனவும் அழைக்கப்படுகின்றது. இதை ஒரு செயல்முறையில் புதிய பொருள்கள் உருவாக்குவதற்கும். இது உலர் கழிவு எனவும் அழைக்கப்படுகின்றது.இதை ஒரு செயல்முறையில் புதிய பொருள்கள் உருவாக்குவதற்கு வேண்டிய மூலப் பொருள்களாக மாற்ற முடியும் புதிய அப்பொருள்கள் அசல் பொருள்கள் போல இருக்கலாம். அவ்வாறு , இல்லாமறும் இருக்கலாம்.

- செய்தித்தாள்கள்
- தாள், புத்தகம் இதழ்கள்
- கண்ணாடி
- உலோகப் பொருள்கள், கம்பி
- நெகிழி (Plastic)கந்தல் துணி
- தோல்
- ரெக்சின் (rexine)
- தொய்வை (rubber)
- மரம் / அறைகலன்
- மூட்டை கட்டல்

## அட்டவணை – 3

## வீட்டு அபாயகரமான கழிவுப் பட்டியல்

- ஏரோசல் டப்பா (aerosol Cans)
- மின்வெட்டொளி விளக்கின் மின்கலப்பெட்டியும் பட்டன் செல்லும்
- நிறம் நீக்கி மற்றும் வீட்டு சமையலறையும் வடிகாலையும் தூய்மை செய்யும் பொருள்கள், இவற்றின் கொள்கவன்கள்
- சீருந்து மின்கலப்பெட்டிகள், எண்ணெய் வடிகட்டிகள் மற்றும் சீருந்து பராமரிப்பு பொருள்கள் மற்றும் நுகர்பொருட்கள், வேதிப் பொருட்கள், கரைப்பான்கள் மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.
- ஒப்பனை பொருள்கள் இரசாயன அடிப்படையிலான பூச்சிக்கொல்லிகள் மற்றும் இவற்றின் கொள்கலன்கள் ஒளி விளக்குகள், குழாய் விளக்குகள், மற்றும் அடர்த்தியான ஒளிர் விளக்குகளை (CFL) வேண்டாம் என்று விலக்கிய மருந்துகள் மற்றும் இவற்றின் கொள்கலன்கள்
- வண்ணப்பூச்சு. எண்ணெய்கள், உயவுப் பொருள்கன் (Lubricants)., வஜ்ரபசைகள் (glues) நீர்மமாக்கிகள் (Thinners) மற்றும் இவற்றின் கொள்கலன்கள்
- பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகள் அவற்றின் வெற்று கொள்கலன்கள் புகைப்பட ஆடியோ / வீடியோ நாடாக்கள் (tapers) மற்றும் இவற்றின் கொள்கலன்கள், இரசாயனப் பொருள்கன் மெத்து (Styrofoam) மற்றும் அறைகலன்களைச் சிப்பம் கட்டும் மென்மையான மெத்துகள் மற்றும் மூட்டைகட்டும் கருவிகள் வெப்பமானிகள் மற்றும் பாதரசம் கொண்ட பொருள்கள் தனியாள் கணினிகள், தொலைபேசிகள் , எம்பி3 இயக்கிகள், ஆடியோ சாதனங்கள், தொலைக்காட்சி பெட்டிகள், கணிப்புப்பொறி, ஜிபி எஸ் (GPS) தானியங்கி மின்னனு டிஜிட்டல் படப்பெட்டிகள் தானாக ஒலியை இயக்கும் கருவிகளும் மற்றும் டிவிடி (DVD) கள்வி.சி.ஆர். (VCR) கள் அல்லது கேம்கோடா போன்ற வீடியோ ஊடகத்தைப் பயன்படுத்தி ஒலி இயக்கும் கருவிகள் மற்றும் பதிப்பான்கள் முதலிய மின் கழிவுகள்.

## அட்டவணை –4

## உயிர் மருத்துவக் கழிவுப் பட்டியல்

### (உயிர் மருத்துவக் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 1998ன் சுருக்கம்)

உயிர் மருத்துவக் கழிவு என்பது மனிதர் அல்லது நோய், ஆய்வு, மருத்துவம் அல்லது நோய்த்தடுப்பு இவை தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகள் ஆகியவற்றின் போது உருவாகும் கழிவுகள் அல்லது மருந்து உருவாக்கப்படும்போது அல்லது உயிரியல் ஆய்வின்போது உருவாக்கும் கழிவுகள் ஆகும்.

| | |
|---|---|
| வகை எண்.4. | கூர்மையான கழிவுகள் (துளை மற்றும் வட்டுக்கள் ஏற்படுத்தும் ஊசிகள், சிரிஞ்சுகள், ஸ்கால்பெல்கள், கத்திகள், கண்ணாடிகள் முதலியன இதில் பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத கூர்மையான |

கழிவுகள் அடங்கும்)

| | |
|---|---|
| வகை எண்.5. | நிராகரிக்கப்பட்ட மருந்துகள் மற்றும் சைடோடாக்சிக் (Cytotoxic) மருந்துகள் (காலாவதியான, மாசடைந்த மற்றும் அப்புறப்படுத்தப்பட்ட மருந்துகள் உள்ளடக்கிய கழிவு) |
| வகை எண்.6. | திடக்கழிவு (இரத்தம் உடல் திரவங்கள் ஆகியவற்றால் அழுக்கடைந்த பஞ்சு, கட்டுத்துணி, பிளாஸ்டர் கயிறுகள் படுக்கைகள், இரத்தம்பட்டு மாசடைந்த பிற பொருள்கள்) |
| வகை எண். 7. | திடக்கழிவு (குழாய், வடிகுழாய், நரம்பு ஊடாகச் செலுத்தம் தொகுப்பு போன்ற கூர்மையான கழிவு அல்லாத ஒருமுறை பயன்படுத்தியபின் எறிந்துவிடும் பொருள்களால் எருவாகும் கழிவுகள்) |

## அட்டவணை –5

## திடக்கழிவு மேலாண்மை பயனர் கட்டண அட்டவணை

வீடுகள், கடைகள், உணவு விடுதிகள், அலுவலகக் கட்டிடங்கள், விற்பனை வளாகங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்கள் கீழ் கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ள திடக்கழிவு மேலாண்மை பயன்படுத்துவோர் கட்டணம் செலுத்த வேண்டும். பரிந்துரைக்கப்பட்டுள்ள மாதாந்திர பயன்படுத்துவோர் கட்டணத்தை சொத்துவரியுடன் பணம் செலுத்தும் இடத்தில் செலுத்தலாம்.

| வ. எண். | விபரம் | காலம் | கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| 1. குடியிருப்பு | | | |
| 1 | தனி குடியிருப்பு(சொத்து வரி ரூ.500க்குள்) | மாதம் | ரூ.30.00 |
| 2 | தனி குடியிருப்புக்கு (சொத்து வரி ரூ.501 லிருந்து 1000–ற்குள்) | மாதம் | ரூ.60.00 |
| 3 | தனி குடியிருப்புக்கு (சொத்து வரி ரூ.1001 லிருந்து 2000–ற்குள்) | மாதம் | ரூ.90.00 |
| 4 | தனி குடியிருப்புக்கு (சொத்து வரி ரூ.2001–ற்கு மேல்) | மாதம் | ரூ.120.00 |
| 2. நிறுவனம் | | | |
| 1 | தனியார் பள்ளிகள் / கல்லூரி தங்கும் விடுதிகள் / தனியார் அலுவலக வளாகங்கள் | மாதம் | தரம் 1 – ரூ.300<br>தரம் 2 – ரூ.600 |
| 2 | மருத்துவமனை (படுக்கையுடன்) மருத்துவ கழிவுகள் அல்லாதது | மாதம் | ரூ.300.00 |
| 3 | கிளினிக் மருத்துவ கழிவுகள் அல்லாதது | மாதம் | ரூ.150.00 |
| 3. வணிகம் | | | |

| | | | |
|---|---|---|---|
| 1 | டீ ஸ்டால்/பெட்டிக்கடைகள் | மாதம் | ரூ.300.00 |
| 2 | நடமாடும் உணவகம் /இதர விற்பனைகள் | தினமும் | ரூ.10.00 |
| 3 | பேக்கரி | மாதம் | ரூ.600.00 |
| 4 | உணவகம் சிறியது | மாதம் | ரூ.600.00 |
| 5 | உணவகம் பெரியது | மாதம் | ரூ.1200.00 |
| 6 | வணிக வளாகங்கள் | மாதம் | சிறியது – ரூ.600.00<br>பெரியது – ரூ. 1200.00 |
| 7 | திருமண மண்டபம் (திருமணம் மற்றும் இதர நிகழ்வுகள்) | நிகழ்வு ஒன்றுக்கு | 300 நபர்களுக்குள் – ரூ.600.00<br>300 நபர்களுக்குள் மேல் – ரூ. 1200.00 |
| 8 | தையற் கடை/ தையற் குழுமம் | மாதம் | 5க்குள் – ரூ.600.00<br>5க்குள் மேல் – ரூ.600.00 |
| 9 | இறைச்சி கடை | மாதம் | ரூ.300.00 |
| 10 | மளிகை கடை / பல்பொருள் விற்பனை கடை | மாதம் | 200 சதுரடிக்குள் – ரூ.300.00<br>200 சதுரடிக்குள் – ரூ.450.00 |
| 11 | டிபார்ட்மெண்ட்ல் ஸ்டோர் | மாதம் | ரூ.900.00 |
| 12 | தேங்காய் / பூ / பழம் / வியாபாரம் | மாதம் | ரூ.150.00 |

4. மற்றவை

| | | | |
|---|---|---|---|
| 1 | திரையரங்கம் | மாதம் | ரூ. 600.00 |
| 2 | பொழுதுபோக்கு மையங்கள் | நிகழ்வுக்கு | ரூ. 600.00 |
| 3 | சிறிய ஜவுளி கடை வியாபாரம் | மாதம் | ரூ. 600.00 |
| 4 | பெரிய ஜவுளி கடை வியாபாரம் | மாதம் | ரூ. 1200.00 |

| | | | |
|---|---|---|---|
| 5 | தோல் பை விற்பனை, காலனி விற்பனை | மாதம் | ரூ. 300.00 |
| 6 | மரக்கழிவுகள் | நடை ஒன்றுக்கு | ரூ. 500.00 |
| 7 | தோட்டக்கழிவுகள் | நிகழ்வு 1க்கு | ரூ. 200.00 |
| 8 | வீட்டுத் தோட்ட கழிவுகள் | நிகழ்வு 1க்கு | ரூ. 100.00 |
| 9 | வாழைமண்டி /வாழை இலை | மாதம் | ரூ. 600.00 |
| 10 | காய்கறி/ கனிகள் கடை | மாதம் | தரம் 1 – ரூ.300<br>தரம் 2 – ரூ.600 |
| 11 | டெக்ஸ்டைல்ஸ் | மாதம் | 2000 சதுரடிக்குள் – ரூ.250.00<br>2001 முதல் 4000 சதுரடிக்குள் – ரூ.500.00<br>4001 சதுரடிக்குள் மேல் – ரூ.750.00 |
| 12 | இருசக்கர வாகன பழுது நீக்கும் கடை | மாதம் | ரூ. 150.00 |
| 13 | மோட்டார் வாகனம் பழுது நீக்கும் கடை | மாதம் | ரூ. 300.00 |
| 14 | பேருந்து சிற்றுண்டி கூண்டு கட்டும் நிறுவனம் | நடை ஒன்றுக்கு | ரூ. 1000.00 |
| 15 | திருவிழா காலம், பருவ காலம் மற்றும் இதர காலங்களுக்கு | நிகழ்வு ஒன்றுக்கு | ரூ. 200.00 |

**குறிப்பு**

i. கரூர் மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணை விதிகளில் அட்டவணை 1ல் குறிப்பிட்டுள்ளவாறு வரிசை எண் I முதல் IV வரை உள்ள தற்போதைய இனங்களுக்கு குப்பை உற்பத்தியாளருக்கும் சேவைக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரும் காலங்களில் ஏற்படுத்தக் கூடிய புதிய இனங்கள் மூலம் குப்பை உற்பத்தி செய்பவர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 மற்றும் துணை விதிகளில் தெரிவித்துள்ள விவரப்படி அவ்வப்போது தேவைக்கேற்ப நகரமன்ற ஒப்புதலின் அடிப்படையில் உரிய துணை விதிகள் ஏற்படுத்தப்படும்.

ii. மேற்கண்ட அட்டவணை Iல் குறிப்பிட்டுள்ள இனங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள தொகை ஆண்டுக்கு ஒரு முறை 10 சதவீதம் உயர்த்தி வசூலிக்கப்படும்.

ஆணையாளர்,
கரூர் மாநகராட்சி.